[illegible]

V 4 NO. 48 3 Dec 1931

M211, N28KN
N31·4·48
189646

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஆம் டிசம்பர் மீ 3உ [No. 48

18 DEC 1931

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 941
2. களவியற் காரிகை
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 943
3. தமிழிரட்டையர்
M. P. குமாரநாயகம் 946
4. சிதம்பரதேவர் சரிதம்.
Dr. V. S. அருணாசலம்பிள்ளை 948
5. கந்தபுராணமும் சங்க நூல்களும்
பண்டிதர் R. திம்மப்பா ஐயர் 949
6. நவராத்திரி—(ஓர் நாடகம்)
K. N. சுந்தரேசன் B.A. (Hons) 950
7. கம்பராமாயணம் (திருவடி சூட்டு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 953
8. ஆண்டாள் - (முத்திப்பேறு)
E. N தணிகாசல முதலியார் B.A. B.L. 955
9. சூளாமணி - (தூதுவிடு சருக்கம் 41—49)
K. இராமரத்நம் ஐயர் B.A. 956
10. வர்த்தமானம். 959

அடுத்த ஆண்டுச் சந்தாத்தொகையை நமது சந்தாநண்பர்கள் இப்பொழுதே தயை செய்து மணியார்டரில் அனுப்பிவைப்பார்களாயின் அது எமக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். இம்மாத இறுதிக்குள் சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஜனவரிமாத முதலில் வி. பி. அனுப்புவோம். அதனைக் கண்டவுடன் பெற்றுக்கொண்டாலன்றித் திருப்பிவிடுவதால் எமக்கு அதிகமும் நஷ்டமாகின்றது. வி. பி. யில் அனுப்புவதைவிட, மணியார்டரில் செலுத்துவதே இருதிறத்தோர்க்கும் இலாபமாம். மலேயா நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லை யாதலால் அங்கிருக்கும் நண்பர்கள் இப்பொழுதே மணியார்டர் செய்தனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"மானேஜர்."

18896

கலாநிலயம்

ஷேக்ஸ்பியர் பெருமை.

இந்தியர்க்குச் சுதந்தரம் வேண்டுமென்பவர் உண்மையில் விரும்புவது யாதென் றறியவொண்ணுமை ஒருபுறமிருக்க, இவ்விந்தியப் பேராசை விடமாட்டோம் என அவ்வாங்கிலேயர் இறுகப்பற்றி என் பெற்றார் என்றுநோக்குமிடத்து அவர்க்கோர் உறுதி ஒன்றிலும் காண்கிலம். முனிவரே எனத்தகும் மேன்மைவாய்ந்த ஆங்கிலவித்தகர், தாமஸ் கார்லைல், "இந்திய அரசு நமக்கிருந்தாலும் இருக்கட்டும், ஒழிந்தாலும் ஒழியட்டும். அது ஒருநாள் போகத்தான் போகும்.......நம்முடைய ஷேக்ஸ்பியரையோ நாம் வைத்துக்கொள்வோம். ஷேக்ஸ்பியர் இல்லாமல் தீராது" என்று விளம்பியுள்ள வாசகம் சொல்லச்சொல்லப் பொருள் வி[illegible]ளருமே யல்லாது சுவைதேய்ந்து குன்றுவதென்பது ஒருபோதுமில்லை. பாட்டினுல் ராபர்ட் பர்ன்ஸ் என்பவரும், கதையினுல் ஸர் வால்டர் ஸ்காட் என்பவரும், கருத்தினுல் இந்தத் தாமஸ் கார்லைல் என்பவரும் இவரனைய பிற புலவர்பெருமக்கள் பலரும் மனிதருக்கிரங்கிஉரைத்த பொருளுரைகளை எல்லாம் போக்கிலே போகவிட்டுத் திரிகின்ற ஆங்கிலேயர், ஒளியை ஒதுக்கி [illegible] பின்பற்றும் நிலைமையை, அடைந்தவராயினர். ஷேக்ஸ்பியரை நெகிழவிட்டு இந்திய அரசை இறுகப்பற்று மிச்சூழ்ச்சி, அடுப்பு நெருப்போடு வாய்த்தவிடும் இழந்தவப் பழமொழிக்கு இணங்கியே முடியும் சரித்திரத்தைத் தெளிதற் கதனைக் காணும் அளவிற் காத்திருக்க வேண்டுமோ !

"ஷேக்ஸ்பியர்முதல் ஏனைய புலவர்களையும் மூட்டை கட்டி நடுக்கடலில் நாங்கள் எறியத் தலைப்பட்ட பிறகுதான், உலகிற்கெல்லாம் ஒரு முழம் உயர்ந்து நிற்கும்படி எங்கள் இங்கிலாந்து வளரத் துவக்கியது" என்று ஓர் ஆங்கிலேயர் எம்மிடம் இரண்டொரு ஆண்டுகளுக்குமுன் உரைத்த மொழிகளை இதன்முன் வேறோர் செவ்வியில் இவ்விதழ்களில் எழுதியிருக்கின்றோமென நினைக்கின்றோம். ஐயோ பாவம், அவரென் செய்வார். ஒரு முழம் நிமிர்ந்து நிற்கும் அவ்வாங்கிலேயர் தலைமேல் துன்பப்பொதி எத்துணை அழுத்துகின்றதென்பதையும், கடலெலாம் அளந்து கொள்ளும் அவர் கால்களை எத்துணை அல்லல்கள் அலைத்து முறிக்கின்றதென்பதையுமறியாதாரல்லரோ அஃதனைய வாசகங்களைக் கேட்டு அங்காந்து நிற்பார்.

இங்கிலாந்திற்கு ஷேக்ஸ்பியர் இருப்பதுபோல் இவ் விந்தியநாட்டிற் கமைந்தவர் கம்பர் காளிதாசன் அனைய புலமையோர் ஆவர். இப்படி நாட்டின் எல்லைக்கு ஏற்றவர்களென்று இப்புலவர்களைப் பிரித்துக் கூறினோம் எனினும் இத்தகைய சிறப்புடைய வித்தகர்கள் தேயத்தாலும் காலத்தாலும் பிரிந்தகல்கின்றவர்களல்லர். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற சிறப்பில் எங்கெங்கும் உறைபவர் இவர். கம்பர் ஷேக்ஸ்பியர் அனையவர் நிரந்தரம் நிலைநின்றுதவுமாறு இயற்றியருளிய நூல்களை மூடிய கைகள் பிறர்க்குதவத்திறந்திடா. இந் நூல்களை மூடியவுடன் இதயங்களையும் மூடி இருப்புத் தாள் இட்டதாகும்.

நம் கலாநிலயத்து இதழ்களில், கம்பர் திருவள்ளுவர் ஆதியாய மற்றைய தமிழ்க்கவிகளும் தக்கஇடம் பெறுகின்றனர். நமதுநண்பர்களில் ஆங்கிலமொழிப் பயிற்சியில்லாதார்பலர் ஷேக்ஸ்பியர் நாடகங்களின்நயத்தினையறிந்து இன்பமும் பயனும் எய்தவிரும்பி, அக் கவியின் நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து விரிவுரை ஆராய்ச்சிகளுடன் இவ் விதழ்களில் எழுதல் வேண்டுமென்று எம்மைச் சிலகாலமாகத் தூண்டி வந்துளர். அவ்விருப்பத்திற்கிணங்க மிக்க ஆவலுடன் இருந்தேமாயினும் அதனை இயற்றி வைப்பதற்கு இதுகாறும் அமயம் வாய்க்காமலிருந்தமையால் நாட்கள் பலவாகத் தள்ளிப்போயின. இனியும் இதனை இயற்றாதிருத்தல் ஆகாது. ஆதலின் அடுத்த ஆண்டு ஜனவரி மாத முதலிலிருந்து ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஒன்றாகிய ஜூலியஸ்ஸீஸர் (Julius Caesar) என்பதைத் தமிழில் மொழிபெயர்த்து, ஆங்காங்குப் பொருளையும் கவியின் கருத்தையும், நாடகத்தின் நயங்களையும், ஷேக்ஸ்பியரின் புலமையையும் விளக்கி வாரந்தோறும் வரைந்துமுடிக்க நிச்சயித்திருக்கின்றோம். எளிதென்றிக் கருமத்தை ஒருவரும் ஏற்றுக் கொள்ளார். ஆங்கிலத்திலேயே ஷேக்ஸ்பியருக்கு உரை காணக் கல்வியும் முயற்சியும் பெரிது வேண்டும். அமைப்பிலும் ஆற்றலிலும் ஆங்கிலமும் தமிழும் வேறு வேறு திறத்தன. ஒன்றிலிருந்து ஒன்றிற்கு மொழிபெயர்க்கும்போது மொழியினின்று பிரிக்கலாற்றாமல் அதனுடனேயே பிறந்து அதனுடனேயே வளர்ந்து அதனுடனேயே திகழ்கின்ற பொருள்நயமும் சொல்நயமும் ஒவ்வோரளவு இடையே சிந்திவிடவேண்டுமென்பது இன்றியமையாததே. ஆயினும் மொழியால் விளையும் இவ்விடையூறு போக, ஷேக்ஸ்பியர் நாடகத்தைத் தமிழிலேயுங் கற்றுப் பயனடையக் கூடிய பாகங்கள் உளவென்பதை மறத்தலாகாது.

நாம் வரையவிருக்கும் நாடகத்தின் நாயகனுய ஜூலியஸ் ஸீஸர் என்பவன் உரோமாபுரியின் பகையெலாம் ஒடுக்கி ஒருதனி நின்ற பெருவீரன். அவனை, அவனுடைய உயிர்நண்பனுய புரூடஸ் என்பவன் மற்றுஞ் சிலரோடு சேர்ந்து ஆத்தாணி மண்டபத்தில் கத்தியாற் குத்திச் சாய்த்துவிட்டனன். அவ்வாறு செய்யாவிடின் உரோமர்களின் சுதந்திரங்களை அழித்து அந்த ஸீஸர் வல்லரசாகித் திர்ந்திருப்பானுதலின் அக்கொலையைப் புரூடஸ் தேசாபிமானத்தை முன்னிட்டுச் செய்தான், என்றவோர் எண்ணம் ஷேக்ஸ்பியர்நாடக ஆராய்ச்சியாளரிடையே நிலைத்திருக்கின்து. எனினும் ஷேக்ஸ்பியர் இப்பாத்திரங்களை எவ்வாறு அமைத்து இயக்குகின்றார் என்பதை ஆழ்ந்து பார்க்குங்கால் அவ்வெண்ணம் நேரிதோ என்றவோர் ஐயம் தோன்றுதற்கும் இடமுளதென நினைக்கின்றோம். இதுவும் இதுபோன்ற மற்றுஞ் சில அரிய விடயங்களையும் தமிழ் மொழிபெயர்ப்பின் வழியாகவும் ஆராய இயலும். இத்தகைய ஆராய்ச்சியோடு ஷேக்ஸ்பியர் நாடகங்களில் மிகச்சிறந்தன சிலவற்றைத் தமிழ்மொழிபெயர்ப்பில் கற்றுக்கொள்வார்க்கு, ஆங்கிலம் தெரியாதென்ற காரணத்தினாலேயே அக்கவிவர் அயலாகவேண்டியதில்லை. எனின் அடுத்த ஆண்டு முதலிலிருந்து ஷேக்ஸ்பியர்நாடகம் நம் கலாநிலய இதழ்களில் தோன்றத் தலைப்படும்.

நாம் எழுத இருக்கின்ற ஷேக்ஸ்பியர் நாடக விளக்கம் இன்னொரு சாரார்க்கும் உதவிசெய்யக் கூடியதாயிருக்கும் என நினைக்கின்றோம். ஆங்கிலத்தில் 'ஸ்கூல் பைனல்' (school-final) வகுப்பு வரையில் படித்து நிறுத்திவிட்டவர் பயிற்சியின் குறைவால் ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஆங்கிலத்தில் தெரிந்துகொள்ள இயலாதவராகின்றார். அன்னவர், இத் தமிழ்விளக்கத்தைத் துணையாகக்கொண்டு முதல்நூலையும் ஆங்கிலத்திலே அயலயல் கற்க முயலலாம். இதனால் அவர் தமக்கு எட்டாதிருந்த ஷேக்ஸ்பியர் கைவந்தவராதலன்றியும் ஆங்கிலபாஷைப் பயிற்சியும் வளரப் பெற்றவராவார்.

———————

களவியற் காரிகை

[935-வது பக்கத் தொடர்ச்சி]

43. * * *

வெளிப்ப[டை]ட முதலா விதும்ப லீறுக்
களிப்பென வுரைப்பது கற்பெனப் படுமே

என்பது என்னுதலிற்றோவெனின் அறத்தொடுநிலை முதலாகப் புணர்ச்சிவிதும்ப லீறாகக் கற்பெனப் படுமென்றவாறு.

முக்கட் கூட்ட முதலா நான்குந்
தொக்கிய லொழுக்கங் கற்பெனத் தோன்றும்

என்பது அறத்தொடு நிலையும், உடன் செலவும், இடைப்பிரிவும், ஆயிடைப்பிரிவும் என வகைப்பட்ட நான்குந் தொக்க வொழுக்கம் முக்கட் கூட்டமுடைய கற்பென்று சிறப்பிக்கப்படுமென்று பொருளியலுடையாரும் அறத்தொடுநிலை கற்புக்கு முதலென்று சொன்னாரென்க. (சஉ.)

[பொருட்கேகுத
44. அடைவாம் வெளிப்படை யாங்கே வரையும்
லுடையாதுடனிலைச் செல்லுதல் கல்விபிரிவுணர்த்தல்
படையார் விழிக்கண காவலிற் போதும் படியுணர்த்தல்
நடையார் பகைதணித் தறக்க கற்பி னவிற்றுவதே.

45. நவில்தரும் வேந்தநக் குற்றுழிப் போதல் நலம்பயின்ற
புவிமிசை நாமப் பொருள்வயிற் போதல் புடைவாரும்
துவிழலை யாயப் பரத்தையிற் போத லெனநாற்தலக்
கவிஞர்கள் நாமோன் பதுவகை யாமெழிற்கற்பென்பரே.

இச்சூத்திர மிரண்டு மென்னுதலிற்றோவெனின், கற்பொழுக்கம் ஒன்பது வகைப்படுமென்பது அறிவித்தலைக் கருதிற்று.

என்னை ? வெளிப்படை நிலையும், வரைபொருட்கேகலும், உடனிலைச் செலவும், கல்விப் பிரிவுணர்த்தலும், காவலிற் பிரிவுணர்த்தலும், பகைதணி வினைப்பிரிவுணர்த்தலும், வேந்தர்க்குற்றுழிப் பிரிவுணர்த்தலும், பொருள்வயிற்பிரிதலும், பரத்தையிற் பிரிதலும் என வொன்பது வகைப்பட்டவாறு கண்டு கொள்க. ... (சச-சரு.)

என்று சொல்லப்பட்ட கற்பொழுக்க மொன்பதுவகையினுள்ளும் வெளிப்படைநிலை பத்தொன்பது வகைப்பட்ட கிளவியாம். அவை வருமாறு:—

46. கற்பமர் பூத்தான் றநம[ப்] புணர்ச்சியுங் காதலித்துப்
பொற்பமர் தண்புனல் தான்றநு நீதிப்புணர்ச்சியும்போ
றற்புத மாநுங் களிறு தநம[ப்] புணர்ச்சியுமாங்
கிற்பயில் கட்டுவிக்கேட்ட லெழிற்கட் டுவிகூறலே [றிக்

47. கூறப் படும்வெறி தானங் கெடுத்தல்கூ றும்மவ்வே
கீறற் றழித லறிவுறக் கூற லெழிற்றலைவி
வேறற்றவளுக் கறத்தோடு நிற்றல் [வெறிவிலக்கல்]
... ...

48. ... ...
... ... வேறலைப்
படிவார் வரைவை மறுத்தல் பரிச மொடுவருதல்
வடிவார் வரைவு மலிதல் வரைவை யுடன்படலே.

49. வரைவார் முரசுக் கிரங்கல் மணமுர சும்விறுவேன்
முரைமார் கிளவிக ளீரஞ்சேர டொன்பது மோங்குந்திரைக்
கரையார் கருங்கடல் சூழுல கத்திற் கலைத்தமிழோர்
விரையார் குழலாய் வெளிப்படை யென்று விளம்பினரே.

இச்சூத்திரம் நான்கும் என்னுதலிற்றோவெனின், முன் சொன்ன வெளிப்படை நிலை பத்தொன்பது வகைப்பட்ட கிளவியாமென்றார்: அவை யறிவித்தலைக் கருதிற்று.

என்னை ? பூத்தரு புணர்ச்சியும், புனறரு புணர்ச்சியும், களிறுதரு புணர்ச்சியும், கட்டுவிக்கேட்டலும், கட்டுவி கூறலும், வெறியெடுத்தலும், வெறியினுக் கழிதலும், அறிவுறக் கிளத்தலும், தலைமக ளோழிக் கறத்தொடு நிற்றலும், வெறிவிலக்கலும், முருகற்குரைத்தலும், செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்றலும், நற்றாய் தன் ஐயன்மார்க் கறத்தொடு நிற்றலும், வரைவு மறுத்தலும், பரிசமொடு வருதலும், வரைவுமலி வுரைத்தலும், வரைவுடன் படுத்தலும், முரசினுக் கிரங்கலும், முரசு வினுதலும் எனப் படுமென்றவாறு.

வெளிப்படைநிலை யெனினும் [அறத்தொடுநிலையெனினும்] அமையும்.

அவற்றுள் பூத்தரு புணர்ச்சி யென்பது என்மகட்கு இவ்வேறுபாடு எற்றினாயிற்று என்ற செவிலிக்கு அறத்தொடு சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

ஆளரிக் கும்மரி தாய்த்திலை யாவருக் கும்மெளிதாந்
தாளரிக் குன்றிற்றன் பாவைக்கு மேவித் தழறிகழ்வேற்
கோளரிக் குந்நிக ரன்னா ரொருவர் குருமலர்த்தார்
[தலே.
வாளரிக் கண்ணிகொண் டாள்வண்ட லாயத்தெம் வாணு
—திருக்கோவை-225.

கந்தார் களிறு கடாய்ச்செந் நிலத்தைக் கறுத்தெதிராய்
வந்தா ரவியவை வேல்கொண்ட கோன்கொல்லி வார்
[துறைவாய்ப்
பந்தார் விரலிதன் பாவைக்கு வேண்டப்பைம் போ
[தொருவர்
தந்தார் தரவவை கொண்டணிந் தாளித் தடங்கண்ணியே.
—பாண்டிக்கோவை.

உள்ளஞ்செய் பாவைக்குன் கைப்போ தருளென்னக்
கொள்ளென் றொருவன் கொடுத்ததற்பின்—கள்ளுண்டு
வண்டினந்தாழ் கின்ற மலர்க்குவளைப் போதிரண்டு
கொண்டணிந்தா ணீபயந்த கொம்பு.
—பழம்பாட்டு.

புனறரு புணர்ச்சி யென்பது நின்மகள் சுனையாடப் புகுந்தவிடத்து அழுந்துபடக்கண்டு ஒருதோன்றல் கரையேற்றினானெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

ஓங்கிய வெண்குடைப் பைங்கழற்செங்கோ லுசிதன்வை
வீங்கிய தண்புன லாடி விரையாட் டயர்பொழுதிற் [கை
றேங்கிய தெண்டிரை வாங்க வொழுகிநின் சேயிழையா
ணீங்கிய போதருள் செய்தனன் வந்தோர் நெடுந்தகையே
—பாண்டிக்கோவை.

காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவா
டாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலா
னீணாக நறும்பைந்தார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போ[த்] தந்தா னகனகலம்
வருமுலை புணர்[ந்தன வென்பதனா லென்றோழி
யருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே]
—கலித்தொகை-39.

* * *

'ஈண்டு 79,80 என்ற இரண்டு எண்களுக்குரிய ஏடு வீடுற்றது, ஆதலால் விஷயத்தொடர்பின்று' என்பது தொன்னூல்-நிலயப் பிரதி.

எய்யா வுள்ளமொ டினையல் வாழியெம்
மைதபு கழங்கிற் பட்டது முளதே
மையில் காட்சியின் மயங்கி
[டை]யதெனு ரு வாகுத றெளிவே.
—பொருளியல்.

வெறியெடுத்த லென்பது கட்டுவிக் கேட்ட செவிலித் தாய் வெறியெடுப்பித்தல். அதற்குச் செய்யுள்:—

வேலன் புகுந்து வெறியா டுகவெண் மறியறுக்க
காலன் புகுந்தவி யக்கழல் வைத்தெழிற் றில்லைநின்ற
மேலன் புகுந்தென்க ணின்று னிருந்தவெண் காடனைய
பாலன் புகுந்திப் பரிசினி னிற்பித்த பண்பினுக்கே.
—திருக்கோவை-286.

வெறியா டுகதிறல் வேலன் புகுந்து வியந்துவெள்ளை
மறி[யே] யறுக்க மலர்ப்ப[லி தூவுக] வண்டமிழ்நூல்
[குறியா வள]வா னிகந்தசெங் கோலரி கூடலன்ன
சிறியா ளிவடன்னை யிப்படி யாக்கிய தீங்கினுக்கே.
—பாண்டிக்கோவை.

[மறியறு]த்த செங்குருதி தன்னல் மனைமுன்
வெறியெடுக்க வெண்பலி தூஉய் வேலன்—வெறியறுத்த
மான்கொண்ட கண்ணி மதிகொண்ட வா[ணுதலா]
டான்கொண்ட விந்நோய் தனக்கு. —பழம்பாட்டு.

வெறியினுக் கழித லென்பது செவிலித்தாய் வெறி யெடுப்பக் கண்டாற்... ... ...

அதற்குச் செய்யுள்:—

அயர்ந்தும் வெறிமறி யாவி செகுத்தும் விளர்ப்பயலார்
பெயர்ந்தும் மொழியா விடினென்னை பேசுவ பேர்ந்திருவ
ருயர்ந்தும் பணிந்து முணராத வம்பல முன்னலரிற் [கே.
றுயர்ந்தும் பிறிதி னொழியினென் னு[துந் துறைவனுக்
—திருக்கோவை-287.

... ...
... ...
... ... கந்தன்றே.
—பொருளியல்.

தலைமகள் அறத்தொடுநிற்ற லென்பது யாய்க் கறிவிக்க வேண்டுந் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நிற்றல்.

வண்டலுற்றேமெங்கண்வந்தொரு தோன்றல்வரிவளையீ
ருண்டலுற் றேமென்று நின்றதொர் போதுடை யான்
[புலியூர்க்
கொண்டலுற் றேறுங் கடல்வர வெம்முயிர் கொண்டுதந்து
கண்டலுற் றேநின்ற சேரிச்சென் றுன்னோர் கழலவனே.
—திருக்கோவை-290.

சிற்றிலின் வந்தொரு தோன்றல் சிறுசோ றிடுமெனநின்
றுற்றுரை யாடு மளவி லுசித னுலகளந்த
கொற்றவன் மாறன் முசிறியைச் சூழ்ந்த குணகடல்வந்
தெற்றுநல் வாயெம் முயிரளித் தேகின னேந்திழையே.
—பாண்டிக்கோவை.

தோழி வாழி மேனு ளொருவ
னாழ்கய மருங்கி னழுந்தத்
தாழ்பெருந் தடக்கையின் வாங்கினன் றகைத்தே.
—பொருளியல்.

வெறிவிலக் கென்பது இவ்வகை சொல்லக்கேட்ட தோழி வெறிவிலக்குதல். அதற்குச் செய்யுள்:—

விதியுடை யாருண்க வேரி விலக்கல மம்பலத்துப்
பதியுடை யான்பரங்குன்றினிற் பாய்புனல் யாமொழுகக்
கதியுடையான்கதிர்த் தோணிற்க வேறு கருதினின்னின்
மதியுடை யார்தெய்வ மேயில்லை வேறினி வையகத்தே.
—திருக்கோவை-292.

சேர்ந்தசங் கத்த சிறுநுதற் காகச்செவ் வேன்முருகற்
கீர்ந்தசங் கத்தையிட் டாலென் பயன்கட் டிலங்கைச்
[செந்தீக்
கூர்ந்[தசங்க]த்துவிற் கோலியக் கொற்றவன் வெற்றிச்
[செங்கை
யார்ந்தசங் கத்தரங் கன்றிருத் தார்கொண்டணிமின்களே.
—கோயிலந்தாதி.
[திர்ந்து
வண்டா ரிரும்பொழில் வல்லத்துத் தென்னற்கு மாறெ
விண்டா ருடலின் மறியறுத் துண்டி வெறியயர்ந்து
தண்டார் முருகற் றருகின்ற வேலநற் றண்சிலம்ப
னொண்டா ரகலமுமுண்ணுங் கொலோநின் னுறுபலியே.
—பாண்டிக்கோவை.

தண்ணென் சாய லிவளோய் தணிய
வெண்ணின ராயின் மன்னோ
வண்ண வாகமு முண்ணுமோ பலியே. —பொருளியல்.

நீலக் கருந்தடங்கண் ணித்தில வெண்ணகைக்குக்
கோலத் தளிர்வண்ணங் கூட்டுமே—வேல
வெறியாருந் தார்க்கண்டன் மேவாரில் வாட
மறியாடுஞ் சொல்லும் வழக்கு.
—சண்டனலங்காரம்.

கோல மறியின் குருதியாற் கொய்ம்மலரால்
வேல னயரும் வெறியாட்டுச்—சால
மடவார் மயின்முருக னன்றியே யண்ணல்
தடமார்பு முண்ணுமோ தான். —களவித்தெளிவு.

முருகற் குரைத்தலென்பது இவ்வகைப்பட்ட வெறியை விலக்கிவைத்து முருகற் குரைப்பாளாய் அயலார் கேட்பச் சொல்லுதல். அதற்குச்செய்யுள் :—

பொன்னணங் கீர்ம்புனற் பூலந்தை
யொன்னார் புலாலளைந்த
மின்னணங் கூரிலை வேல்மன்னர்
கோன்விய னாட்டவர்முன்
றன்னணங் கன்மை யறிந்தும்
வெறியின்கட் டாழ்ந்தமையால்
மன்னணங் காயினு ம[ாகவ]ச்
செவ்வேள் மடவியனே. —பாண்டிக்கோவை.

கடவுட் கற்சுனை யடையிழந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்து மண்ணார்ந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறியிடை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே. —நற்றிணை-34.

பேதை வாழிய முருகே யாவது
மேதில னென்பதை யுணர்ந்து
வாராநோய் தணிய வருத லானே. —பொருளியல்.

செவிலி யறத்தொடுநிற்றலென்பது தோழி யறத்தொடு நிற்றல்கேட்ட செவிலி நற்றாய்க்குக் கூறுதல். அதற்குச் செய்யுள்:—

இளையா ளிவளையென் சொல்லிப் பரவுது மீரெயிறு [ர்
முளையா வளவில் முதுக்குறைந் தாள்முடி சாய்த்திமையோ
வளையா வழுத்தா வருதிருச் சிற்றம் பலத்துமன்னன்
றிளையா வருமரு விக்கயி லைப்பயில் செல்வியையே.
—திருக்கோவை-294.

முருந்தார் கலிதரு முத்தங் கடுக்கு முறுவிரண்
டரும்பா வளவி லறிவையுண் டாயின ளாங்கரச
ரொருங்கா ரணியம் புகச்செற்ற தென்ன னுசிதனெங்
[கோன்
கரும்பார் கழனிகள் சூழ்கன்னி நாடன்ன காரிகையே.
—பாண்டிக்கோவை.

முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையினை வாரா முதுக்குறைந் தனளே.
—சிற்றெட்டகம்.

முளையெயி றிரம்பா விளமைப் பருவத்த
ளளிய ளொருவன் றளையவிழ் கண்ணி
முலையும் வாராள் முதுக்குறைந் தனளே.
—பொருளியல்.

தன்னெயிறு தோன்றா தனமு மடிவரையா
னன்னுதலி ... ... மறையாத—மின்னனைய
அல்லாங் குழலா ளறிவுடைமைக் கன்னோநா
மெல்லாந் தொழவேண்டு மின்று.
—களவித்தெளிவு.

நற்றாய்[தன்னையன்மார்]க் கறத்தொடு நிற்றலென்பது செவி[லி] யறத்தொடு [நிற்ப] நற்றாய் தந்தை முதலாயினார்க்குக் கூறுதல். அதற்குச் செய்யுள்:—

சான்றோர் வரவும் விடுத்தவர் தந்தக வுந்நமது [திற்
வான்றோர் குடிமையு நோக்கினல் லாற்பொரு ளேகரு
றென்றோய் கமழ்கண்ணிச் செம்பியன் மாறன்செங்
[கோன்மணந்த
மீன்றோய் கடலிடந் தானும் விலையன்ற மெல்லியற்கே.
—பாண்டிக்கோவை.

சான்றோர் வருந்திய வருத்தமு நமது
வான்றோய் வன்ன குடிமையு நோக்கித்
திருமணி வரன்றுங் குன்றங் கொண்டிவள்
வருமுலை யாகம் வழங்கி [னோ ந]ன்றே
யஃதான்று, அடைபொருள் கருதுவி ராயிற் குடையொடு
கழுமலந் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவி னுறந்தை
யுள்ளி விழவின் வஞ்சியும் சிறிதே. —நற்றிணை.

கலந்தாங் கிளமுலைக் கற்புடை மடந்தையைக்
குலஞ்சா லொழுக்க நோக்கி
நலஞ்சா லண்ணற்கு நேர்வது நடையே.
—பொருளியல்.

* * *

‘ 83-ம் ஏடு இன்று’ என்பது தொன்னூல் - நிலயப் பிரதி.

... ... ஞ் சொன்னபடி
தந்தார் நமருந் தரவிசைந்தார்—நந்தாத
பண்ணீர் மொழிமடவாய் பார்வருந்த வார்முலைமேற்
கண்ணீர் சொரிய[ல்] கலுழ்.
—களவித்தெளிவு.

வரைவுடன்படுத்த லென்பது தலைமகனது மேம்பாடுந் தலைமகளது சிறப்புடைமையுந் தோழியுணர்த்தல். அதற்குச் செய்யுள்:—

குறைவிற்குங் கல்விக்குஞ் செல்விற்கு[நின்]குலத்திற்கும்
[வந்தோர்
நிறைவிற்கு மேதகு நீதிக்கு மேற்பினல் லாணிணையி
லிறைவிற்குலாவரை யேந்திவண் டில்லையி னேழ்பொழிலு
முறைவிற்குலநுதலாள்விலையோவெம்மையோதினர்க்கே.
—திருக்கோவை-266.

விரவும் பெருமைக் குலனுந் தகவுமிக் கீர்நுமது
வரவு கருதித் தருதுமன் றாய்விடின் மண்வணங்கிப்
பரவுங் கழனெடு மாறன் பகைநறை யாற்றுவென்றான்
உரவுங்கடல்வையந்தானும்விலையன்றெமொண்ணுதற்கே
—பாண்டிக்கோவை.

வான்றோய் தொல்குடி மரபு மிவ்வழிச்
சான்றோர் தமது வரவு நோக்கி
நேர்ந்தன மல்லதிவ் வுலக
மூன்றுடன் பெறினும் முடிவதோ வன்றே.
—பொருளியல்.

தூய நினதறிவுங் கல்வியுந் தொன்முனிவ
ராய வவர்வரவு மன்றாயின்—மேயசீ
ரோலா[ர்பூ] வட்ட முறையிடவும் போதாது
வேலா முலைக்கு விலை.
—களவித்தெளிவு.

முரசினுக் கிரங்க லென்பது இவ்வகை சொல்லக் கேட்ட தலைமகன் வினைமுற்றி நிதி[யொடு] நீண[க]ர் புகுந்த பின்னர் முரசறைதல் கேட்ட தலைமகள் சொல்லுதல். அதற்குச் செய்யுள் :—

அடற்களியாவர்க்கு மன்பர்க் களிப்பவ[ன் றுன்பவின்பம்
படக்]களியாவண்டறைபொழிற்றில்லைப் பரமன்வெற்பிற்
கடக்களி யானை கடந்தவர்க் கோவன்றி நின்றவர்க்கோ
விடக்களி யாநம் விழுநக ரார்க்கும் வியன்முரசே.
—திருக்கோவை-297.

செம்மையில் லாததெவ்வேந்தரைச் செவ்வூர்ச் செருக்
வம்மிகு தானை யடலரி கேசரி யம்பொதியில் [கழித்த
வெம்முக யானை கடிந்தவர்க் கோவன்றி வேறெவர்க்கோ
நம்மனை வாசலில் நம்முர சந்தா னரலுவதே.
—பாண்டிக்கோவை.

முன்னாள் யானை நம்மை முனிவழித்த
அன்னார் தமக்கோ [பிறர்க்கோ]
இந்நா ணங்கடை யிரங்கிய முரசே.
பழம்பாட்டு.

முரசுவினாத லென்பது இவ்வகை சொல்லக் கேட்ட தோழி தந்தை முதலாயினார் கேட்கச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

அந்தணர்க் காகி யகத்தியன் றானுரை செய்தமும்மைச்
செந்தமிழ்க் காவலன் றென்னம் பொருப்பிற் செழும்
[பொழில்சூழ்
பைந்தடத் தாழ்கயந் தாழ்வது கண்டிப் பணிமொழியை
வந்தெடுத் தார்க்கன்றி யாவருக் காமிம் மணமுரசே.
—பாண்டிக்கோவை.

செருமலை தானவர் முப்புரந் தீயெழுத் தேவர்கட்கும்
வருமலை தீர்த்தவன் மாமழ பாடியில் வந்தெதிர்ந்த
கருமலை யீட்டிய செம்மலை யன்றிக் கறங்குவதிம்
மருமலை கூந்தலை யார்கொள்ள வேண்டி மணமுரசே.
—மழவையெழுபது

தேனை யனைய மொழியாண்மேற் சென்றெதிர்ந்த
யானைகடிந் தார்க்கோ வவர்க்கன்றி—யேனை
...றியங்கு நின்றவர்க்கோ யாவர்க்கோ வென்றி
மூன்றின்க ணார்க்கு முரசு.
—பழம்பாட்டு.

இவை யெல்லாம்
[வெளிப்படை தானே விரிக்குங் காலைத்]
தந்தை தாயே தன்னைய ரென்றாங்
கன்னவ ரறியப் பண்பா கும்மே’—இறை—26.
என்னுமிலக்கணத்துட் கண்டுகொள்க. (சசு-சக.)

வெளிப்படை நிலை முடிந்தது.

50. விளம்பு மியல்பைப் பழித்த லியற்பட வேவிளம்ப
லுளங்கோள் தணப்பிடர் தன்னை யொழித்த லெனவுரை
[க்கும்
வளங்கோள் கிளவிகள் மூன்றும் வரைபொருட் கேக
[லெனக்
குளங்கொண்ட நன்மொழிக் கொம்பே தமிழினுட் கோப்
[புறத்தே.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், வரை பொருட் ககறல் மூன்று வகைப்பட்ட கிளவியா மென்பதறிவித்தலைக் கருதிற்று. என்னை? இயற்பழித்தல், இயற்பட மொழிதல், தணப்பிட ரொழித்தல் என. அவற்றுள் இயற்பழித்த லென்பது இவ்வகை வெளிப்பட்டபின்றையும் வரையாது செட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிந்த விடத்து ஆற்றாளாய தலைமகளைக் கண்ட தோழி சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

பொன்னு மணியும் பவழமும் போன்று பொலிந்திலங்கி
மின்னுஞ் சடையோன் புலியூர் விரவா தவரினுண்ணோ
யின்னு மறிகில வாலென்னை பாவ மிருங்கழிவாய்
மன்னும் பகலே மகிழ்ந்திரை தேரும்வண் டானங்களே..
—திருக்கோவை-189

இகலே புரிந்தெதிர் நின்றதெவ் வேந்த ரிருஞ்சிறைவான்
புகலே புரியவென் றான்கன்னி யன்னாள் புலம்புறுநோய்
மிகலே புரிகின் றதுகண்டு மின்றிவ் வியன்கழிவாய்ப்
பகலே மகிழ்ந்திரை தேர்கின்ற நாணப் பறவைகளே.
—பாண்டிக்கோவை.

வானது காணக் கொடையா லுலகை வளர்த்தருளும்
சோனகர் வாழுஞ் செழும்பொழில் சூழ்ந்து பாரனையா
டானணி வாணுதல் கண்டும் பகலே தனித்தனியே
மானமி லாதிரை தேரும் பறவைகடா மழகழிந்தே.

—பல்சந்தமாலை.

இயற்பட மொழித லென்பது இவ்வகை சொல்லியியற் பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிதல். அதற்குச் செய்யுள்:—

மின்றா னனைய விளங்கொளி வேலொடு வெண்டிரைமே
னின்றா னிலமன்ன னேரியன் மாற னிகன்முனைபோற்
கொன்றான் றலைக்குஞ்சரம்வர நீங்கவென் கோல்வளைகள்
சென்றா லதுபிறி தாகவிவ் வூர்வரச் சிந்திப்பரே.

—பாண்டிக்கோவை.

தொல்கவின் றொலைந்து தொன்னலஞ் சாஅய்
நல்கார் நீத்தன ராயினு நல்குவர்
நட்டனர் வாழி தோழி குட்டுவன்
அகம்பா வழிய நூறி யரும்பிலைப்
பகற்றீ வேட்ட ஞாட்பினு மிகப்பெரி
தலரெழச் சென்றன ராயினு மலர்கவிந்து
மாணல மிழந்த காந்தளஞ் சோலை
யினஞ்செல் வயக்களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத் தியம்பவும்
கடுமான் புல்லியங் காடிறந் தோரே.

—நற்றிணை-14.

வஞ்சி யிடைமடவாய் வல்வினையே னுண்கண்ணு
நெஞ்சு மகலாது நிற்றலாற்—செஞ்சுரும்பு
பண்ணளிக்குந் தண்டார்ப் பருவரைசூழ் நன்னாடன்
றண்ணளிக்கு முண்டோ தவறு.

கிளவிதெளிவு.

தணப்பிடரொழித்த லென்பது ஒருவழித்தணத்தற்கு ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி யாற்றுவித்தல். அதற்குச் செய்யுள்:—

கானமர் குன்றர் செவியுற வாங்கு கணை துணையா
மானமர் நோக்கியர் நோக்கென மானற்றொடைமடக்கும்
வானமர் வெற்பர்வண் டில்லையின் மன்னை வணங்கலர் [போற்
றேனமர் சொல்லிசெல் லார்செல்லல் செல்ல றிருநுதலே.

—திருக்கோவை-274.

அடுமலை போற்களி யானை யரிகே சரியுலகின் [மகிழ்ந்து
வடுமலை யாதசெங் கோன்மன்னன் வஞ்சியன் னாய்
படுமலை போல்வண்டு பாடுசெங் காந்தட்பைந்தேன்பருகு
நெடுமலை நாடனை நீக்கு[ெ]மன்றோ [நீ] நினைக்கின்றதே.

—பாண்டிக்கோவை

குழலிசை வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட்
குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென்
றயல்வாழ் மந்தி
கழல்வனபோ னெஞ்சகைந்து கல்லருவி தூவு
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்.

—பழம்பாட்டு.

இவையெல்லாம்

'பட்ட பின்றை வரையாது கிழவோ
னெட்டிடைக் கழிந்து பொருள்வயிற் பிரிதலும்
பொருள்வயிற் பிரியா தொ[ருவ]ழித் தணத்தலும்
புரைவ தென்ப கற்பா லான' —இறை - 25.

என்னுஞ் சூத்திரத்துட் கண்டு கொள்க. (கூ)

வரைபொருட் கேகல் முடிந்தது.

தமிழிரட்டையர்

[927-வது பக்கத் தொடர்ச்சி]

இரட்டைப் புலவர் வரலாறு:—

இனிய தமிழிற்கு நிலைக்களனுய பாண்டிநாட்டின்கணுள்ள சிற்றூர் ஒன்றில் செங்குந்தர் மரபில், நற்குணங்களெல்லாம் ஒருங்கே வாய்ந்த ஒருவர் சில நூற்றாண்டுகளுக்கு முன் திகழ்ந்தார். அவர்தம் நல்வினைப்பயனால், "தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்", "இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெனில்லவண் மாணாக்கடை" என்ற பொதுமறை போற்றும் உயரியசீலம் வாய்ந்த தம்இல்லாளுடன் இல்லறம் நடத்தி வந்தார். எஃகினால் செய்யப்பட்ட தளை ஒருவனைப் பிணிக்குமாபோல், பொன்னினால் செய்யப்பட்ட விலங்கும் ஒருவனைக் கட்டுப்படுத்துமியல்பினதன்றோ. அது குறித்தன்றோ முப்பாலினும் "பற்றுக பற்றற்றான் பற்றினைப் பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்று உலகமுழுவது மொருங்கே போற்றும் திருவள்ளுவர் (Bard of Universal man) கூறியதூமென்க. அவ்வாறே நல்வினைஞான அவருக்கும் நெடுநாள் மகப்பேறு கிடைத்திலது. பின்னரும் பிறந்த இரு மகாரில் மூத்தது காலூனமுடைத்தாயும் பின்னது கண்பார்வை பெறாததாயுமிருந்தமையான் அவர் மகவீன்ற மகிழ்வு முழுமையும் அடைந்திலர். என்னே ஊழின் வலிமை? சின்னாட்களில், கண்ணுள்ள சேய் நகர்ந்து செல்ல, காலில்லாப் பிள்ளையும் மதைப்பற்றிக்கொண்டு இடம்பெயர்ந்து ஏகுதலைக் கண்ணுற்ற சான்றோர் களிப்பும், பிறர் வியப்பு மெய்தினர்.

இவ்விரு காண்முளைகளுக்கும் என்ன பெயரிட்டு சான்றோர் விளித்தனரென விளங்கவில்லை. அவ்விருவோரு மொன்றாய்ப் பிறந்தமையாலும், எப்பொழுதும் பிரிந்திடாமையாலும், இடம்விட்டிடமேகுங்கால், முன்னவனது விழித்துணையும் பின்னவனது கால்துணையும் அவர்கள் பயன்படுத்திக்கொண்டமை போலவே, அவர்களி லொருவர் துவக்கும் செய்யுளின் மறுபகுதியை மற்றவர் முற்றுறச் செய்வாராகையாலும் உலகோர், அவர்களை இரட்டைப் புலவரென வழங்கினர். இருமுது குரவர்களு மிகத்தைவிட்டுப் பரத்தில் சேர, இவ்விரட்டையர் ஒருவர்மிசை யொருவர் வந்தேகிச், செல்லுமிடங்களிலுள்ள வள்ளல்கள் பால், ஒவ்வொரு பணமட்டுமே யேற்றுக்கொண்டு இப்பூவுலகை வலம்வர லாயினர்.

அந்நாளில், சோழநாட்டரசன் தான் கண்டுவந்துள்ள வியத்தகு செய்தி யொன்றைத் தெளிவாய் எடுத்து விளம்புநர் பெறுமாறு ஒருபொன்முடிப்பைக் கட்டிவைத்து, அதை முரசறைந்து விளம்பரப் படுத்தவும் செய்திருந்தான். கேட்ட பல்லோரும் கிழி பெறுமாசை அலைத்தாட்ட அல்லது மில்லதுமான பல செய்திகளை எடுத்தியம்பிப் பயனடையாது அலக்கணெய்தினர். அம்மன்றத்தினருகே இவ்விரட்டையரும் சென்று காத்திருந்தனர். பொன்னொடு பட்டு

முண்டாயின், "வாருங்கள் வாருங்கள்" என்று கூவியழைப்போரில் ஒருவராவது இவர்களைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. அருள்கொண்டு வினவிலரேனும் அவர் கோலத்தைக் கண்டேனும் பரிவு கூர்ந்திலர். அப்பொழுது கண்ணில்லான், "நெடுந்தூரம் நடந்தமையோடு நெடுநேரம் நிற்க நேர்ந்தமையாலும் கால்களில் நோய்மிகுகின்றதே என்று ஒரு செய்யுளை ஆரம்பித்ததும், "தேனசைகூ னத்தை கொளுந் திருநாடாளங்களுக்குத் தானமெங்கே" என்பதாய்க் காலில்லான் அதை முடிப்பதும் கேட்ட, வளவன், சிங்கக் கட்டிலினின்றும் விரைந்தெழுந்து, "ஐயப்படாது உணர்வானைத், தெய்வத்தோ டொப்பக்கொளல்" என்றது பொய்யாமொழியாகையால் அவ்விருவர் தாள்களில் வீழ்ந்திறைஞ்சி, முகமனுரைகளும் வெகுவாய்க் கூறி நின்றான். பின்னர், ஏனையோர் கேட்குமாறு, "செந்நெல் பயிரினின்றும் ஒழுகிக்கொண்டிருக்கும் தேனை நத்தையொன்று உண்ணக் கண்டேன். அதனை இவர்களே எடுத்தியம்பினார்கள்" என்றவனாப் பொன்முடிப்பை அவர்களிடம் கொணர்ந்தான். பெரியோன் ஒரு காசு மட்டும் கைக்கொண்டு எஞ்சியவற்றை இறைபணிக்காக்கக் கூறி அவனைவிட்டு நீங்கினர்.

நீங்கியவர் சென்று ஒரு குளக்கரையிலுள்ள அரசடிப்பிள்ளையாரின்முன் தம்முடை பணம் முதலியவற்றை வைத்துவிட்டு வாவியில் நீர்படிந்தாடி மீண்டு வந்து பார்க்கையில் பணமில்லாமை கண்டு அண்ணன் தம்பியோடு சொல்லுதலும், இளையோன் பகற்பொழுதில் கண்ணுள்ள நீயறியாது இத்திருட்டை யார்செய்திருக்கக்கூடுமென்றவனாப் பிள்ளையாரின் உறுப்புக்களைத் தடவிப் பார்த்து இத்தேவனே திருடன் என முடிவுசெய்து அக்கடவுளை நோக்கி,"உன் பின்தோன்றலான முருகவேள் குறப்பெண்ணாகிய வள்ளியம்மையைத் திருடினான். தாய்மாமனான கோபாலன் கோபிப் பெண்கள் குலைகுலைய வெண்ணெயையும் கன்னிகைகள் கலக்கமுற ஆடைகளையும் கவர்ந்த கள்வனன்றோ? அக் கொடிவழித் தோன்றலான நீ எம் பணத்தை வௌவினது "குலத்தளவே யாகும் குணம்" என்ற மூதுரைக்கு எடுத்துக் காட்டாயிலங்குகின்றது" என்பதாய் ஒரு முழுப்பாவையும் ஓதினான். அக்கவிக்கு ஒரு பணமும் முன்தான் திருடிய பணமொன்றுமாக இரு பணங்களைத் துதிக்கையினால் நீட்டினான் சப்பைக்காலும் பெருவயிறும் படைத்தோன். சப்பைக்கால் படைத்தும் பெருவயிறின்மையால் முன்னோன் என்ற பெயர் புலவனுக்கு முற்றும் பொருந்தாவிடினும் முக்காலும் பொருந்துவதால் அம்முன்னோன் பின்றோன்றலை வெகுவாய்ப் புகழ்ந்து "ஊனக்கண்க ளெல்லாரும் படைத்துள்ளார்கள். நின்போன்று அறிவுணர்ச்சிக் கண்கள் மிகச் சிலரே பெற்றுள்ளார்கள். நின்கண்களே பயன் தரத்தக்கனவன்றிப் பிறவெல்லாம் புண்போன்று துன்பத்திற்குத் துணைசெய்வனவேயாம்" என்று போற்றி மகிழ்ந்தான்.

அப்புகழ்ச்சியாற் களிகூர்ந் தாணவப்
பேராழியினி லமிழ்ந்திடாமன்
மெய்ப்புலமைத் துணைவ னண்ணன்
தொழுதுநடம் புரியும்விமலன்றாட்கே
பொப்புரைக்கத்தகு முனதாள் சுமந்த
பயனே யிதுவாமுண்மை யென்று
னெப்புனிதவர்போன் றொன்றாய்ப்
பிறந்திட்டாலு மிப் பண்பெய்திடாரோ.

[புலவர்புராணம், பக்கம், 174-33]

அதன்பின்னர் அவர்கள், அப்பணத்தை மாறி அரிசி பருப்பு முதலிய பண்டங்கொண்டு அன்னமமைத்து,

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்லபூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற்காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்ல வென்சிந்தை கெட்டுச்
சாணும்வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே

என்று பட்டினத்தடிகளும்,

"பாவினன் தொடரிட்ட தொழில்க ளெல்லாந்
துண்டிட்ட சாண் கும்பியின் பொருட்டாயது"

என்று தாயுமான சுவாமிகளும்,

"ஒருநா ளுணவை யொழியென்றா லொழியா
யிருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளு
மென்னோ வறியா யிடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்த லரிது"

என்று நீதிநூலோரும் விதந்தோதியுள்ள பசிப்பிணியைத் தணித்துக்கொண்டு அருகிலுள்ள நகரைக் குறுகினர். ஆங்குத் தலைவனாய் விளங்கிய குபப்பிரபுவின் குணங்களைக்கேட்டு அவன் வாயிலையடைந்து நின்றார். அக்குரிசில், அன்று, மணமாற்றித் தந்தமகள் மீண்டு தன்னில்லிற்கு வந்துள்ளாளாகையால் அவளோடு அளவளாவுதலிலேயே போதுபோக்கினமையின் இவர்களை வரவேற்றிலன். அதனைக்கண்ட பெரியோன், "இம்மாங்காட்டு வேளான் மகளை வதுவை செய்துகொடுத்ததாய்ப் போக்குக்காட்டித் தானே யவளுடன் இன்புறுகின்றான்" என்று அரைப்பாட்டுப் பாடச் சிறியோ னதன் பிற்பகுதியாய் "மக்கள் மெய் தீண்டலுடற்கின்ப மற்றவர் சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு" என்ற குறட்பாவை எடுத்தாண்டு அவ்வளவனும் நாயனார் கூறுமவ்விதக் குற்றமற்ற இன்பத்தையே யடைகின்றான் என்ற பொருள்படுமாறு அச்செய்யுளை முற்றுறச் செய்தான். பெரியோன் கூற்றுச் செவிகளில் கொடுமையாய்த் தொனித்தனவெனினும் சிறியோன் மொழிகள் ஈன்ற இளங்குழவிகளின் இனிய மொழிகளைபோன்று இனித்தமையால் குபவள்ளல் கொடுமையே குறித்தனனெனினும் குணமே செய்தான். அவனிடமும் ஒருபணம் பெற்றுக்கொண்டு தம்வழிச் சென்றார்.

ஆறெழுத்தந்தாதி :—அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி என்னும் இந்நூல், முருகக்கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனைசெய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்திய முனிவரே பாடியதெனக் கருதப்படுவது. நூறு செய்யுள்கள் இந்நூலில் உள. பாராயணத்திற்குரியது. Dr. V. S. அருணாசலம்பிள்ளை அவர்கள் இயற்றிய பதவுரை விளக்கம் முதலியவைகளைக் கொண்டது. விலை அணா 12. தபால் சார்ஜ் வேறு.

ஏமாங்கதத்திளவரசன் :—இது ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயரால் எழுதப்பட்ட நாவல்நூல். இலக்கிய நலம் துலங்கும் இக்காதற்கதை படிப்பவரைக் கவரும் தன்மையது.

விலை ரூ. 1. தபால் சார்ஜ் வேறு.

கலா நிலயம், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

சிதம்பரதேவர் சரிதம்.

[924-வது பக்கத் தொடர்ச்சி]

கோமளாங்கனுடன் சென்ற சேவகர்களில் தப்பித்துப் போனவன், இரவிவர்மனுக்கும் சோமபாலனுக்கும், கோமளாங்கனும் சேவகர்களு மிறந்தார் எனக் கூற இருவருந் திகைத்துத் துக்கித்து யாதுசெய்வதென்று தோற்றாது மெய்ம்மறந்து சிந்தை குலைந்து வருந்துகையில் சேனையின் பேர் ஆரவாரங்கேட்டது. உடனே இரண்டு போர்வீரர்கள் தோன்றித் தாங்கள் பரமார்த்தகேஸரிப் பிரபுவின் தூதுவர்களென்றும் சண்டைசெய்யச் சேனையுடன் பட்டணத்தை முற்றுகைபோட்டிருப்பதாகவும் தெரிவித்துயுத்தத்திற்கு வருகிறீர்களா, நாட்டைவிட்டு ஓடுகிறீர்களாவென்றும் வினவினர். இரவிவர்மன் நடுங்கி எல்லாச் சத்துருக்களும் ஏககாலத்தில் வந்துவிட்டார்களென்று ஏங்கிச் சோமபாலனைப்பார்க்க அவன் "இதோ யுத்தத்திற்கே வருகிறோம்" என்று அவர்களை யனுப்பி அரசனுடனும் மற்ற மந்திரிகளுடனும் சேனையை நடத்தி வெளிப் போந்தான்.

சூர்யோதயத்தில் விக்ரமகேது பரமார்த்தகேஸரியை வணங்கி யுத்தந்தொடங்கத் தனக்குவிடைதரவேண்டுமென்ன அதற்கிணங்கி யாவரும் யுத்தகோலம் பூண்டு ஐயபேரியடித்து ஆரவாரித்தார்கள். குலசேகரப்பெருமாள் கொலைப்படுவதில்நின்றுந் தப்பித்துப் புத்திரனுடனும் மருமக்களுடனும் போர்புரிய வந்தார் என்னும் வதந்தி பிறக்கவே குடிகளனைவரும் இரவிவர்மனைத் தூஷித்து தம் அரசர்வசமானார்கள். சோமபாலனுக்கு வசப்பட்டிருந்த பாலைவனச் சைன்யம் யாவும் பயந்து இரவிவர்மனை விட்டகன்று சக்கரவர்த்தியை அடைந்தனர். இரவிவர்மன் நடுங்கிச் சோமபாலனைப் பலவா றிகழ்ந்து தனது முதன்மந்திரி மிருதுசீலன் எடுத்துக்கூறிய நல்லுணர்வை யிகழ்ந்து சோமபாலன் துற்போதனைக் கிடங்கொடுத்து மோசம்போனேமே யென்றுவருந்தச் சோமபாலன் அவனைக் கவனியாது சேனையுடன் முன்சென்றான். இருதரச் சேனைகளும் எதிர்த்துப் போராடின. விக்ரமகேது சோமபாலனை யெதிர்த்து அவன் நடுங்கும்படி தாக்க அவன் விக்ரமகேதுவை எப்படியேனும் வசப்படுத்த முயன்றான். "இனியும் உன் புத்தியும் யுக்தியும் நாசமடைய வில்லையா" வென்று சீறிக் கர்ச்சித்து அவன் இவன் சிரசைக் கொய்து வீழ்த்தினான். சேனை புறங்காட்டியோடிற்று. இனிப் பிழைப்பதில்லை யென்றெண்ணித் தன் சக்தியெல்லாம் சேர்த்து இரவிவர்மன் விக்ரமகேதுவைத்தாக்க அவன் சேனைத்தலைவர்கள் தைரியங்கொண்டு விக்ரமகேதுவைச் சூழ்ந்தனர். புகழேந்தியும் விஜயனும் புலிகளைப்போற் பாய்ந்து விக்ரமகேதுவுக்குத் துணைபுரிந்து சேனைத்தலைவரை வதைத்தனர். இரவிவர்மன் ஆயுதங்களை எறிந்துவிட்டுப் பிராணபயத்துடன் இருகைகளையும் கூப்பிக் "குலசேகரப் பெருமாள் இரக்ஷிக்க இரக்ஷிக்க" வென்று கூக்குரலிட்டுப் பிரார்த்தித்தான். விஜயன் அவனைச் சக்ரவர்த்தியிடங் கொண்டுசெல்ல அவன் அவரைச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து "அபயம் அபயம்" விக்ரமகேது வென்னுங் கடோற்கஜன்நின்றும் என்னை இரக்ஷிக்கவேண்டு மென்று முறையிட்டான்.

குலசேகரப்பெருமாள் தயவே உருவாகக்கொண்டவராதலால் அவனுக் கபயாஸ்தம் கொடுத்து ஜயபேரி முழங்கப் பரிவாரத்துடன் பட்டணம் பிரவேசிக்கக் கண்ட குடிகள் அவரைப்போற்றி எதிர்சென்றழைத்து உற்சவங் கொண்டாடினார்கள். அரசன் தனது அரண்மனைசென்று இரவிவர்மனையு மவன்தோழர்களையுங் காராக்ரகத்தி லடைத்துத் தனது பந்துஜன பரிவாரத்துடன் சந்தோஷமாய்க் குடிகள்போற்றச் சிம்மாசனத் திருந்தான். விக்ரமசேனன் முன்போற் சர்வாதிகாரமும் வஹித்துச் சேனைகளையடக்கி நாடெங்கும்புகழச் சமாதானம்விளைவித்து வாழ்ந்துவந்தான்.

இப்படிச் சிலநாட்கள் சென்றபிறகு மூகாம்பிகை யோகீஸ்வரர் இராஜசபைக்கு எழுந்தருள, சிதம்பரனும் புகழேந்தியும் எதிர்சென்று நமஸ்க்கரித்து, சோடசோபசாரங்களுஞ் செய்து அரசன் சபையில் ஆசனத்திருத்தி, ஆனந்தக் கண்ணீர் சொரியப் பலவாறு போற்றினார்கள். ஆனந்தக் கூத்தாடினார்கள். மனமுருகப்பாடிப்புகழ்ந்து ஸ்தோத்திரஞ்செய்து தண்டஞ் சமர்ப்பித்தார்கள். யோகீச்வரர் மகிழ்ந்து அவர்கட்கு ஆசிகூறிச் சிதம்பரனைத் தழுவித் தன்னைநமஸ்க்கரித்து நிற்கும் அரசன்முதல் யாவருக்கும் ஆசிகூறி உட்காரச்செய்தனர். பிறகு புகழேந்தி யெழுந்து யோகீச்வரர் பெருமையும் அவர் விருத்தாந்தத்தையும் யாவருக்குத் தெரியும்படி நன்குரைத்து "இந்தப் பரமாத்மா சிதம்பரனுக்கு உயிர்கொடுத்து உத்திரவளிக்காதிருந்தால் சிதம்பரசேகரன் முன் அரண்யம் விட்டு வருவதுமில்லை. அரசன் பிராணனை அன்று இரக்ஷிப்பதுமில்லை" என்றான். யாவரும் யோகீச்வரரை மறுபடியும் நமஸ்க்கரித்துப் பிரார்த்தித்தனர்.

யோகீச்வரர் அரசனை நோக்கி "ஓ அரசே! நீர் விருத்தாப்பிய ராகையால் இனி உம்மால் இராஜ்ஜிய பாரம் வஹித்து அரசாட்சி செய்ய முடியாது. உமக்குக் கடவுள் அருளிச்செய்தபடி பூரண ஆயுளுடைய மஹானுபாவனை புத்திரசிகாமணி இருப்பதால் அவனுக்கு உமது விரிந்த பெருமைதங்கிய இவ்வரசையளித்துப் பட்டங்கட்டுவதைக் கண்குளிரப் பார்க்க இங்கு வந்திருக்கின்றோம்" என்று கூறினார். குலசேகரப் பெருமான் இதைக்கேட்டு ஆனந்தங்கொண்டு அவரை நமஸ்க்கரித்துப் பட்டணமெங்கும் அலங்கரித்து அரச சமூகங்களை வரவழைத்து நல்ல சுபதினத்தில் சிதம்பரசேகரப் பெருமாளுக்கு யோகீச்வரர் ஆசிகூறிப் பட்டாபிஷேகஞ் செய்வித்துப் புகழேந்தியை முதன் மந்திரியாகவும், விஜயசேகரனை சேனாதிபதியாகவும் நியமித்து யாவருஞ் சந்தோஷஸாகரத்திலாழ்ந்தவர்களாய்க் கடவுளைப் பிரார்த்தித்துக் குடிகள் மனங்களிக்க உலகஞ்செழித்தோங்க வந்தனை வழிபாடுகள் செய்து மனங்களிக்க வாழ்ந்திருந்தார்கள்.

கந்தபுராணமும் சங்கநூல்களும்.

[917-வது பக்கத் தொடர்ச்சி]

நாட்டிற்குக் காவலுறுப்பாவனவற்றுள் ஒன்றாகிய கோட்டை மதிலின் தன்மையையும் அமைப்பையுங்குறித்துக் கந்தபுராணத்தில் உள்ளவாறேயெழுதி, அவற்றுக்குப் பற்றுக்கோடாயுள்ள சங்கநூற் பகுதிகளைத் தக்கசான்றுகளுடன் வரையத்தொடங்குவாம்.

தடுக்கு மாற்றலர் நால்வகைப் படையொடுஞ்சாய[கும்
முடுக்கும் வாள்கொடு விதிர்த்திடு மெழுவினுன் முருக்
எடுக்கும் எற்றிடும் எறிந்திடும் விழுங்கிடு மீர்க்கும்
படுக்குங் கன்மழை சொரிந்திடும் விற்படை பயிலும்.
உருக்குஞ் செம்பினை யங்கத்தை யிழுதொடு மோச்சும்
வெருக்கொ ணேமிகள் எறிந்திடும் வச்சிரம் வீசி
யிருக்கும் நின்றிடும் குப்புறும் செறுநரை யிகலி
நெருக்குந் தாழ்ந்திடும் உலகளந் தோனென நிமிரும்.
பீடு தங்கிய பணைமுர சியம்பிடும் பிடிக்குங்
கோடு மார்த்திடுந் துடிகளு மொலித்திடுங் கொட்புற்
றோடு மீயுயர் புள்ளையு மெறிந்திடு மரண்மே
லோடு மீளுமக் கதிரையுந் தடுப்பபோ லுந்தும்

சூலம் வீசிடும் தோமரம் வீசிடுஞ் சுடர்வேல்
ஆலம் வீசிடும் சுடுமணல் வீசிடும் அளப்பில்
சாலம் வீசிநின் றீர்த்திடும் அகழியிற் றள்ளும்
சீலம் வீசிய பாரிட மாமெனத் திரியும்'

திகழும் வெங்கன லுமிழ்ந்திடும் ஒன்னலர் செலுத்தும்
பகழி மாரியை விழுங்கிடும் பறவையிற் படரும்
இகழு நாவையும் மனத்தையு மெறிந்திடு மென்னாற்
புகழு நீரவன் றம்மதின் மேலுறும் பொறிகள்

(கந்தபுராணம், உற்பத்திகாண்டம், நகரப்படலம், செய்யுள், 15, 16, 17, 18, 19.)

என்பன, மதிற்பொறிகளின் செய்கைகளைக் குறித்த செய்யுட்களாம்.

(மதில்மேலுள்ள பொறிகள் பகைவர்கள் வரவொட்டாமல்) தடுக்கும், அப் பகைவர்கள் சதுரங்கசேனைகளோடும் தோற்றோடும்படி துரத்தும், (அவர்கட்கெதிரில்) வாளைக்கொண்டு சுழற்றும், எழுத்தண்டினால் கோபித்தடிக்கும், அவர்களை மேலேயெடுக்கும், பின்னும் நிலத்தில் மோதும், வீசியெறியும், வாயிலிட்டு விழுங்கும் (பிடித்து வெளியில்) இழுக்கும், (அப் பகைவர்களைப்) பின்னுங் கொல்லும், கல்மழையைச் சிந்தும், வில்வித்தையைப் பயிற்றும்)

(உருக்கிய செம்பினையும் ஈயத்தையும் நெய்யோடு காய்ச்சி வீசும், (யாவரும்) அஞ்சத்தக்க சக்கரங்களையெறியும், வச்சிரப்படையை வீசிக்கொண்டிருக்கும், நிற்கும், அவ்வாறு நின்று குதிக்கும், பகைவர்களைக் கோபித்து எதிர்க்கும், சற்றுத் தாழ்ந்து செயலற்றிருக்கும், இறுமாந்து உலகத்தை யளந்த திரிவிக்கிரமனைப்போல உயர்ந்து வளரும்.)

(வலிமை பொருந்திய வேய்ங்குழலையும் முரசவாத்தியத்தையும் முழக்கும், கையிற் பிடித்த சங்குகளையூதும், உடுக்கைகளையொலிக்க அடிக்கும், சுழன்று ஆடும், ஆகாயத்தில் உயர்ந்து செல்கின்ற பறவைகளையும் மோதும், மதிலின் மேல் ஓடிச் செல்லும், சென்று பின் திரும்பும், ஆகாயத்துலாவும் சந்திர சூரியர்களாகிய அவ்விருகதிர்களையும் தடுப்பன போன்று பாயும்.)

(சூலம், தோமரம், விளங்குகின்றவேல், ஆலம், சுடுமணல் இவற்றை யெடுத்து வீசும், அளவற்ற வலைகளை வீசிநின்று பகைவர்களைப் பற்றி யிழுக்கும், மீண்டுமவர்களை அகழியில் விழத் தள்ளும், ஒழுக்கமற்ற பூதத்தைப்போன்றுலாவும்)

(பிரகாசிக்கின்ற வெவ்விய அக்கினியை விழுங்கும். பறவைகள்போலப் பறந்து செல்லும், தம்மை யிகழ்ந்து கூறுகின்றவர்களது நாவையும் மனதையிடத்தையும் எறியும், (ஆதலால்) அம்மதிலின்மேற் பொருந்திய பொறிகளின் சிறப்புக்கள் என்னால் புகழ்ந்துரைக்கும் தன்மை யுடையனவல்ல)

இவை, இச்செய்யுட்களின் பொழிப்புரையாம்.

'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு'

என்பது, ஓர் நாட்டின் உறுப்புக்க ளின்னின்னவை யென்பதைக் குறித்த குறட்பாவாகும்.

கிணறு குளங்கள் (கீழ்நீர்), ஏரி ஆறுகள் (மேல்நீர்) என்று சொல்லப்படும் இருவகை நீரும், (நாட்டின் நடுவில் உள்ளதாகாமல் ஒரு பக்கத்திலுளதாகல், அகில், மிளகு, தக்கோலம், குங்குமம், கோட்டம், ஏலம், சந்தனம், பொன் முதலிய பொருள்களுடைமை, மழைக்காலத்தி லுட்கொண்ட நீரை வெயிற்காலத்தில் வெளிப்படுத்தல் ஆதியன)வாய்த்துள்ள மலையும், அம்மலையினின்று வரும் நீரும், அழியாத கோட்டையும் நாட்டிற்கு அவயவமாம்) என்பது, சிரமேற் புலவர் கொள் பரிமேலழகரது உரையையொட்டிய பொழிப்புரை.

இங்ஙனம் நாட்டிற்குறுப்பு இந்நான்குமெனக் கூறியதில் 'வல்லரண்' என்பதும் அடங்கியிருக்க, மீட்டும் நாடு என்ற அதிகாரத்தின்பின் அரண் என்ற அதிகாரத்தைத் தேவர் தனித்துக் கூறியதிலிருந்தே, ஏனையவற்றினும் இவ் வரண் என்பது சிறப்புடைத்தாதல் பெறப்படும்.

'இனி அந்நாட்டிற் குறுப்பாய் அடங்குமாயினும், பகைவரால் தொலைவு வந்துழி, அது தனக்கும் அரசன்தனக்கும் ஏமமாதற் சிறப்புப்பற்றிப் பிறிதோரங்கமாக ஓதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்' என்று பரிமேலழகர், இதன் சிறப்பை 'அரண்' என்ற அதிகாரத் தொடக்கத்தில் தம்முரையிற் குறிப்பிட்டுள்ளார்.

'மணிநீரும் மண்ணும் மலையும் மணிநிழற்
காடு முடைய தரண்'

என்பது, அவ்வரண் இத்துணைப் பகுதியுடைத் தென்பதைக் குறிக்குஞ் செய்யுளாம்.

(எஞ்ஞான்றும் வற்றாத) நீலமணி போன்ற நிறத்தினையுடைய நீரும், (நீரும் நிழலுமில்லாத வெட்டவெளியாக உள்ள) நிலமும், மலையும், குளிர்ந்த நிழலையுடைய காடும், (என்னு மிவற்றைச் சுற்றிலும் பெறுதலே அரணாகும்) என்பது பரிமேலழகரது உரையைத்தழுவிய பொழிப்புரை.

எஞ்ஞான்றும் வற்றாத நீரென்பார் 'மணிநீர்' என்றும், நீரும் நிழலுமில்லா மருநிலம் என்பார், மண் என்றும், செறிந்தகாடு என்பார் 'அணிநிழற்காடு' என்றுங் கூறினர். மதிற்புறத்து மருநிலம், பகைவர் அரண்பற்றாமைப் பொருட்டு, நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என இயற்கையுஞ் செயற்கையுமாய் இந்நான்கரணுஞ் சூழப்படுவது அரணென்பதாம்' என்பது, இக்குறளில் குறிக்கப்பட்ட பரிமேலழகரது குறிப்புரை.

யாதொரு பொருளுமில்லாமல் வெட்ட வெளியாக உள்ள நிலத்தை வடநூலார் 'மருபூமி' யென்பர். மரு என்ற வட சொல்லுக்குப் 'பிராணிகள் தாகதாபங்களால் மரணமடையத்தக்க இடம்' என்பது காரணப் பொருள். மதிலின் வெளிப்புறத்தில் வெகுதூரம் மருபூமி யிருக்குமாயின் பகைவர்கள் சேனையோடு தங்கித் தொழில்செய்தற்கு இடமில்லையாம். ஆகவே, அவர்கள் இம்மதிலரணை முற்றுகைசெய்து கைப்பற்றிக்கொள்ள முடியாதாதலால், அது ஓர் சிறந்த அரணாமென்க.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[931-வது பக்கத் தொடர்ச்சி]

குஞ்சு :—நான் சாமியார் மடியில் படுத்துக் கொள்கிறேன். அம்மாபடத்தைத் தேடித்தேடி கால்எல்லாம் நோகிறது—தெருவில் எங்கேயோ கிடக்கிறது அது.

உரு :—சாமியார் மடி ! தொடக்கூடாது அவரை !

குஞ்சு :—நானும் மடியே--ஈரத்துணி களைந்து இப்பொழுதே வேறு அணிந்தேன்.

துரை :—நீ என்னை விடச் சிறந்த மடி—தூய்மை.

உரு :—அவர் குளிககவில்லை—அழுக்கு உடுத்திய துணி சாக்குத்துணி—உடம்போ விபூதிப்புழுதி-வா-உன் படுக்கைக்குக் கொண்டுபோகிறேன்—இருட்டி விட்டது, பேய் பிசாசு பாம்பு பூதம் இருக்கும், சிறு பெண் நீ !

குஞ்சு :—அதனால்தான் உங்கள் மடியில் படுத்து உறங்க எண்ணினேன்.—தாடிக்கம்பளியின் வெது வெதுப்பில்—குளிரவே குளிராது !—பயமுமில்லை.

துரை :—மடியிலிருந்து புரண்டுகீழுருண்டாலோ ? மண்டை உடைந்து விடும் !

மாயாண்டி குரல் :—உடைந்துவிடுமா---ஐயையோ! அவைகள் உருண்டு விழுந்து விட்டனவே—எல்லோரும் தேடுங்கள்.

உரு :-தட்டினையே கீழே போட்டுவிட்டானு தண்டன்-பழங்கள் உடைந்தன என்று என்னை மாரடிப்பன், மாறிடிப்பன்-நான் கடைவீதிக்குப் போய்விட்டதாகச் சொல். (வலப்புற வாயப் பாதையில் மறைகையில்)

குஞ்சு :—உருமபிள்ளை உரைப்பதெல்லாம் பொய் தானே !

துரை :—இல்லை—அதோ—கடைவீதிக்குப் போகப் போகிறான்.

குஞ்சு :— அதல்ல ! பழம் எப்படி உடையும் ?

துரை :—கொட்டை உடையாதா—அதைத்தான் சொன்னான்.

[மாயாண்டி மச்சுப்படியிலிருந்து இறங்கிவருகிறான்.]

மாயா :—விளக்குச் சற்றே தருவீரா-குருட்டுகிறது இருட்டு !

துரை :—எடுத்துக்கொள்.

மாயா :—குஞ்சு, நீயும் வந்து தேடு—அப்போ காட்டினேனே—அந்தப் பழங்களை.

குஞ்சு :—அவை பழங்களல்ல— ஏன் தேடுகிறாய் ?

மாயா :—பதினொன்று பறிகொடுத்து வாங்கினேன்—சாமியாரே நீங்களும் வருகிறீர்களா ?

துரை:— இவள் போதும்—எனக்குக் கண் சரியாகத் தெரியாதே.

குஞ்சு :—அதனால்தான் கண் சதா மூடியிருக்கிறது—அறியாயா நீ.

மாயா:—பொத்தென வீழ்ந்தால்உள்ளம்துடியேன்—டம்மென்றல்லவோ சத்தம் எழுந்தது—மச்சுப்படிகள் மேல் !—பழங்கள் அங்ஙனம் ஒலியாவே !

குஞ் :—(தேடிக்கொண்டே) இதோ—இந்தா !

மாயா :—(அருகுற்று விளக்கொளியில் பார்த்து) சீ—விளையாட்டா உனக்கு—செங்கலல்லவோ இது ?

துரை :—குழந்தைதானே—விளையாடட்டுமே !

குஞ் :—செங்கல்லா—பார், கண் கொண்டு !

மாயா:—பொடிச்செங்கல் ! சிறு செங்கல்துண்டு !

குஞ்சு :—(உருட்டிக்காட்டி) இந்தப்பக்கம் நோக்கு - நிறத்தை, சாயத்தை—

மாயா :—சாயமா—ஆமாண்டா !

குஞ்சு :—இதென்ன பழம் ?

மாயா :—கல்லுப்பழம்! செம்மண் பழம்! எங்கே அந்தப் போக்கிரிப் புளுகன் !

குஞ்சு:—மாம்பழ மல்ல—காம்பு பாரிங்கே! கொட்டையே யில்லாப் பழம்.

துரை :—கொட்டையே இல்லை ? ஆகலாலோ—அத்துணைப் பெருவிலை !

மாயா :—என் வயிறெரிகிறது—பார் அவனை என் செய்கிறேன்.

ஒருகுரல்! சொல்வன நீ செய்வதானால், நானே சொல்லாதனவும், சொல்லாமலும் செய்திடுபவன். (கோவமாய் உருமபிள்ளை ஓடிவருகிறான்)

மாயா :—திருப்பிவிடு ரூபாய்களை—கொண்டா—சட்டைப்பை அதிலேதான் போட்டிருந்தாய்—(பையைப் பிடிக்கப் பாய்கையில்)

உரு :—இதனைக் கிழிக்க? அவைகளை எரித்து! கொண்டா—அத்தனை சட்டைகளையும் !

துரை :—என்ன செய்தான் சட்டைகளை !

உரு:—(கன்னத்திலறைந்து) உன் நிலம் புலம் அனைத்தையும் பிடுங்கிப் பறிப்புப் பண்ணியோ, ஏலம் போட்டோ என் ஆயிரம் ரூபாய் உடுப்புக்களையும் புத்தம் புதிய புதுமையில் மீண்டும் எனக்கு நீ தைத்துக் கொடுக்க உன்னை அடித்து வாட்டாவிட்டால் உருமபிள்ளை யல்ல நான் !

குஞ்சு :—எருமை பிள்ளையோ ?

உரு :—ஆம்—இந்நீண்ட இரு கொம்புகள் இருப்பதால் (இரு கைகளாலும் அவளைக் குத்துகிறான்.)

குஞ்சு :—அட யமனே !—அம்மா! அமமா !—கொல்கிறான்—செத்தேன் நான் (கதறுகிறாள்.)

உரு :—(மாயாண்டியை) உன்னைக் கொட்டுகிறேன் நெட்டுகிறேன் (மீண்டும்மீண்டும் அடிக்க.)

மாயா :—பிழை உன்னது, அடி எனக்கு! தெய்வமே—அடுக்குமா ?—கண்ணனும் முக்கண்ணனும்—கண்ணேயில்லை! அடி !—நான் அழுவதில்லை.

உரு :—தெய்வமே தெட்டுகிறது இப்படி, தீட்டுகிறது—அடுக்கி அடுக்கி! (மீண்டும்மீண்டும் போடுகிறான்) எனது துணிகளைப் பொசுக்கி............

ஒரு குரல் :—காலகாலன் பொசுக்கினன்—இதோ வந்தான் காலத்திலே!

[வலப்புறத்திலிருந்து தியாகு வருகிறான்]

உரு :—சீற்றம் சீறிப் பாய்கையில் இரையாக வந்தாய் நீயும்; நல்லவேளை—வாப்பா !(தியாகுவையும் தாக்கப் பாய).

தியா :—குஞ்சு, குரல் காட்டு, உயிரோடிருக்கிறாயா தாக்குண்ட பின்னும்.

குஞ்சு :—வயிற்றில் வலிக்கிறது—இரண்டு அள்ளைகளிலும் அவன் குத்தின இடத்தே!-அம்மா! அம்மா!!—வாராயோ அம்மா?—குத்தினண்டி இவன்-குற்றுயிரடி நான் !

தியா :—வந்தேனம்மா,—இரு—இவனை முதலில் (உருமபிள்ளையின் இருகைகளையும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு) மாயாண்டி வா நீயும்-வேறொருவருமில்லையா?

குஞ்சு :—நான் வரட்டுமா ?

குரல் :-நானும் வருகிறேன்-(ராஜீயா தோன்றுகிறான்)

உரு :—சாமியாரே துணை, தெய்வம்—வாங்கள் நீங்கள். என் மணிக்கட்டுகளைத் திருகுகிறான்—அசைக்க முடியவில்லை—வா ! வா !!

துரை :—சண்டை வேண்டாம், நான் சந்து செய்கிறேன். உம் குறைகளைக் கூறுக.

உரு :—பிடியை விடு—கடவுள் ஆணை—நான் ஓடமாட்டேன்.

தியா :--(பிடியை விடுத்து) கடவுளையும் நம்புகிறவனு நீ—வாம்மா, குஞ்சு! முதலில் உன்னையன்றோ நான் கவனித்திருக்கவேண்டும்...........

மாயா :—சாமியாரே—முதல் நான் சொல்லுகிறேன் என் குறையை. அனைத்தையும் அறிவீர்—ரூபாயை எண்ணிவைக்கச் சொல்லுங்கள் கீழே. பதினொன்று!

உரு :—நீ முதலில் பதினொன்று நூறுகளைக்குவி! என்ன முன்யோசனையுடன் ஆழ்ந்து சூழ்ந்து சுடலைத் தொழிலோனே போன்று—எரித்திருக்கிறான் துணிகளை ! முழுதும் பொசுங்கவில்லை, அணியவும் முடியாது! ஒவ்வொன்றும்! கொசுவிக் கொசுவிச் சேர்த்து ஒரு சாண் அளவுக்கு ஒரு பக்கம் நனைத்து மறு பக்கத்தைக் கொளுத்தியிருக்கிறான்—உரு கொஞ்சம் தெரியணும், என் மனமும் எரியணும என்று.

தியா:-ஹாஹா ஆழ முன்னிய ஆரறிவன் என்கிறாயே (சிரிக்கிறான்) அவன்தொழில்இப்பணியேபோலும்!

மாயா :—நானு—அது செய்தேன்—உன் அறைப் பக்கம் நான் செல்லவேயில்லை—வீண்பழி சுமத்துவதா—இவர்தான் சென்றார் !

தியா :—அந்தப் பேரறிவையும் தொண்டுப் பெருமையையும் எளியோன் மண்டைக்குள்ளா புகுத்திப் புகழ்கிறாய் நீயும்.

உரு :—(கோவமாய்)ஏண்டா—நீயோ?

தியா :—காந்தியே.

உரு :—எறவாடையிலிருந்து பறந்து வந்தானோ என் துணிகளைக் கொளுத்தென—

தியா :—அவர் சிறையிலிருப்பினும் அவர் மூட்டிய தீப் பொறிகள், புயலேற்றில் இவர்ந்த சுடர் ஒன்று மழை நீருள் ஒளிந்து விழுந்திருக்கலாம் மாயமாய்! என்னைச் சிறைவைத்தனைபே இவ் அறையில்—எறவாடை அஃதே—(சிரிக்கிறான்)

ராஜீ :—காந்தி இங்கு வந்திருக்கிறாரு ?

மாயா :—நான் இதுகாறும் பார்த்ததில்லை. காட்டுங்கள் காந்தி சாமியாரை.

தியா :—இதோ, இவர்தான் சாமியார் ?

குஞ்சு :—நான் அவர் மடியில் உட்காருகிறேன் என்றால் தள்ளுகிறாரே—இவரா காந்தி !

தியா :—ஐயையோ —அவர்மடியிலா — வாம்மா ! கெட்டியாகப் பிடித்துக்கொண்டு என்னை, விடாதே!

குஞ்சு :—அம்மா மடியில்தான் ! (இடப்புறத்தில் மறைகிறாள்)

உரு :—யாரடா கொளுத்தியது—சொல்லுண்மையை. வா-போலீசாரிடம்,காத்திருக்கிறது மோட்டார்!

தியா :—காந்திதான் என்றேனே (சிரிக்கிறான்)

உரு :—பொய் !—அவனும் துராக்கிரகிதான்...

மாயா :—அவர் மகாத்மா அல்லவோ — அவரது மாயங்களை என்னெனக் கண்டோம். துராக்கிரகி என்றும் புகழ்கிறார்களா—அவரை !

உரு:—சாது நீ—பிடிடா இவனை, பிடி, சாமியாரே!

மாயா :—(ஓட்டம்பிடித்து) பிடி பார்ப்போம்!

உரு :—யார் சொல் — சீக்கிரம், நான் தொடரணும் அவனை !

தியா:—ஈராண்டுகட்குமுன் ஊர் ஊராய்ச் சென்று அன்னியத் துணிகளைச் சொக்கப்பானை கொளுத்தி மூட்ட நீ மூட்டைகள் திரட்டின யல்லவா ?

உரு :—ஆம்—அந்நாள்—காந்தித் தொண்டனயிருந்தேன்.

தியா :-அன்று எரிக்க மறந்த நீ, செய்யாது விட்ட குற்றத்தின் பாவத்தை எரிக்க இன்று தீமூட்டியிருப்பாய் நீயே !

உரு :—நானே ? எனக்கே நினைவில்லையே !

தியா :—மனதில் உதைகொடுத்து நினைவுகளைக் கலக்கி அலசிப்பார், உதறிப்பார் !

துரை :—என்னப்பா ?—கனவுகண்டாயா—உருமபிள்ளை—பித்தன்போல் திகைத்து நிற்கிறாயே !

தியா :—நான் யார் சட்டை அது என்று கேட்டேனே அப்பொழுது—முன் நீ என்னிடம் வாங்கிச் சென்றதே அச்சட்டை என்று நினைவு வந்ததோ இல்லையோ உனக்கு ?

உரு :—உனதா? ஐயையோ-அன்றைக்கே எரித்து விட்டானே, மன்னிக்கவும் !

தியா :—தவறென்ன-எரிக்கவே தந்தேன் ஈராண்டுகளுக்குமுன்-இன்று எரித்தாய், நான் வருந்தவில்லை, மகிழ்வே எனக்கு.

உரு :—ஆம்—சாமியார் இணக்கத்தினால் வந்த நற்காற்றும் உயர் எண்ணமும் என்னைச் சற்றுமுன் பரவசமாக்கியது "ஏண்டா-தீவினையோய்! உன்பிழைகளை நிரல் நிறுத்தி நிறு, எண்ணி இரங்கு, உய்வழி அஃதொன்றே !" என்று ஓரசரீரி உருத்து இடித்தது போல் செவிப் புகுந்தது—அந்நாள் ஆற்றிட மறந்த பணி, உனது இன்றையவரவால் முதலில் தூண்டிற்று போலும் ! நினைவில்லை.

துரை :—பரவசமாயினோர் வேற்றுலகே பாய்ந்து விடுகின்றனர்.—இச் சிற்றுலகினை மறந்திடுவர்"வேண்டாமினை !" என்று உதித்த துறவெண்ணம் ஊங்கிட அதனைச் செய்தனை நீ—இப்பொழுது இரங்கேல் நீ-மகிழ்ந்திடு எனக்கு உகந்த சீடனுகுவை, திண்ணம்.

உரு :—சரி, வருந்துவதில்லை—துணிகளைத் துச்சமாக மதிப்பேன் இனி !

தியா :—அப்பா—என் செவி குளிர்கிறது—மகிழ்துள்ளுகிறேன்.

ராஜீ :—இதனைப் பார்—அதனினும் மகிழ்வாய்—உன்னோடு பேசஎந்நேரம் காத்றுக்குவிந்திருக்கிறேன்.

தியா:—இரகசியமோ-என்ன இதிலே-யார்தந்தது.

ராஜீ :—யார் கொடுப்பர்—நீயே யோசி !

தியா :—ஓகோ—அந்தக் கடிதத்திற்குப் பதிலோ ?

ராஜீ :—ஆம்—சாமர்த்தியமாய் வாங்கி வந்துவிட்டேன் !

தியா :—உன் திறனே திறன் (வாரி எடுத்து முத்தமிட்டு) வா—போவோம் வெளியே—இவர்கள் இங்கிருக்கிறார்கள்.

ராஜீ :-இதோ Niagara வீசுகிறேன் (கையிலிருக்கும் மின் விளக்கொளி வீச)

தியா :— வேண்டம், அலைவீழ்த்துகளில் மூழ்கி விடும் இந்த ஓலை (வலப்புறத்தில் செல்கிறான்)

[சுபத்திரையும காமுவும் இடப்புறம் தோன்றுகின்றனர்]

ராஜீ :—என் சைகிள்—

தியா :—பின்னர் வருவோம்—முதலில் இந்தக் கடிதத்தைப் பார்த்து......சாதக பதிலாயின்..........

ராஜீ :—சாதகம் தான்.

தியா :—ஜாதகம் பார்க்கவேண்டியதில்லை என்று சொல்லப் போகணும் நாலைந்துவீடு தாண்டி (மறைகின்றனர்)

சுப :—என்ன கடிதம் உங்களுக்கு என்று,பாட்டி! கேளுங்கள் அவரை ! (சிரிக்கிறாள்)

காமா :—கேட்பானேன் ?— வம்பன்—வம்பன்—அன்பு மொழி உண்டோ, அவன் வாயில் ?

துரை :—சரி, புறப்படுவோம்; சீடா, என்ன ?

உரு :—தயார் நானும்.

சுப :—பாட்டி, கோயிலுக்குப் போவானேன் ?—வெட்கமாயிருக்கு.

காமா :—உன் அழகு யாருக்குண்டு,—வெட்கப்படுவதேன் ?

உரு :—இரவு வேளை--யார் பார்க்கப்போகின்றனர் உன்னை! கோவிலிலே-சாமியார் என்றதும்விலகிடாரா?

துரை :—திரை போடச்சொல்லிக் கடவுள் திருமுன் தனியே புகுவோம், நிற்போம்.

சுப :—சரி, வேடம் பூண்டபின், ஆடித்தான் தீரணும் இனி !

காமா:-மோட்டார் ஏறலாமா உருமபிள்ளை ? இடக்கும் மடக்கும் செய்யாதே ?

உரு :—போய் எனதறையைப் பூட்டி வருகிறேன் (வாயப் பாதையில் மறைகிறான்)

காமா:--விளக்கை இங்கேவை—இவர்களுக்காக !

உருமபிள்ளை குரல் :— எனக்கும் வேண்டுமே—அந்த ஒன்று போதாதா ?

சுப :—குஞ்சு எங்கே— அவளை மறந்தோமே !

துரை:—அவளுக்காகத்தானே இவையெல்லாம்—மறக்கிறோமோ ?

உரு-குரல் :—கட்டிலில் தூங்குகிறாள் — எடுத்து வருகிறேன்.

சுப :—நான் போய்க் கொணர்கிறேன்.

துரை :—இப்பொழுது பார்க்கக் கூடாது—திடுக்கெனக் கோயிலில் காண்பதே, நலம் ! கடவுள் அருளைப்பாருங்கள். தூக்கம் இச்சமயம்வந்தது அவளுக்கு—நம் காரியம் பலிக்கும்

காமா:-வேண்டாம் சுபத்திரை,—உன் புடவையும் கசங்கி அழுக்காகிடும்—ராணிபோல் நட.

சுப:-நடி என்று பொருந்தக் கூறுங்கள்.

துரை :—நாம் வண்டியில் போய் அமர்வோம் (எழுந்து மோட்டார் நோக்கிச் செல்கிறான்).

காமா :—சுபத்திரை, நீயும் போ—இதோ நானும் (இருவரும் தொடர்கின்றனர்—மூவர் குரலே கேட்கிறது).

துரை-குரல்:—சரி—ஏறுங்கள்—நான் உட்கார்ந்து விட்டேன்.

சுப-குரல் :—பாட்டி, நீங்கள்—கடைசி நான்.

காமா-குரல்:—வீட்டுக்குக் காவல் யார் ?-மாயாண்டியை எச்சரித்து வருகிறேன்.

[புத்தக அறை வழியாய் உருமபிள்ளை வருகிறான்]

உரு:—நான் சொல்லிவிட்டேன்,ஆகட்டுமென்றான்.

சுப-குரல் :—இன்னும் தூங்குகிறாளா — பாவம் அலைச்சலும் ஒய்ச்சலும்—கண்ராவி......

காமா-குரல்: —பத்திரமாய் உன்னிருக்கை அருகு படுக்கவிடு—மோட்டாரோட்டு மிடத்து அருகு நான் அவளை விடுவதில்லை ; இப்பொழுது தூக்கந்தானே! போகட்டும்.

உரு :-(இடப்புறஞ் சென்று மறைகையில்) விழிக்கவில்லை—அப்பாடா—என்ன கனம்—தூங்கட்டும்!

சுப-குரல் :—குஞ்சுவா—அது ? கனம்! சோளத் தட்டைப் போலல்லவோ...அவள்.

உரு-குரல் :—நான் உட்கார்ந்தாச்சு...

காமா-குரல் :—ஏறு நீ !

சுப-குரல் :—சரி! (மோட்டார் புறப்படும் அரவம்)

உரு-குரல் :—பாட்டி ! குங்குமம் எடுத்துக்கொண்டீரோ ?

காமா-குரல் :—இதோ—அரை நொடியில், வருகிறேன்- இஞ்சினை நிறுத்தாதே......(ஒளியில் தோன்றுகிறாள்)

ராஜீயா-குரல் :—(உரக்க)-குஞ்சு ! அதோ—அங்கே -மாமா அழைக்கிறார் வா! (மோட்டாரொளி பாதையில் வீசுகிறது, குஞ்சுவும் ராஜீயாவும் வலப்புறத்தில் தெரிகின்றனர்)

சுப-குரல் :—அதோ, குஞ்சு அங்கே ! பொய்யா சொன்னீர்கள் (மோட்டார் வரும் அரவம்) நிறுத்து.

துரை-குரல்: —விடுவண்டியை! தாணுடி ! நிற்காது!

சுப-குரல்:-பாட்டி!செத்தாள் குஞ்சு! விலகு! மோதிவிடும்! கவனம்-ஐயையோ ! நட்ட நடுவில் நிற்கிறாளே!

குஞ்சு :—(எதிரோடி)—அம்மா— விலகிக் கொண்டேன் ! அம்மா !

காமா:—உருமபிள்ளை, நிறுத்து—மாட்டாயா!

[வண்டி திடும்மென மோதிக்கொண்டு சுக்குப்பொடியாகிற பேராவம்கேட்கிறது கண்ணுக்குத் தெரிவதில்லை]

ராஜீ :—சொலு அறைமேலும் தெறித்திருக்கிறது துண்டங்கள்—நான் தப்பினேன்—குஞ்சு !

[தியாகு ஓட்டமாய் வலப்புறத்திலிருந்து வருகிறான்]

தியா :—என்னுச்சு ! உருமபிள்ளை, எல்லோரும் தப்பினீர்களா ?

உரு :—செத்தேன் ! செத்தேன் !!

சுப-குரல் :—நான் தப்பினேன் ! குஞ்சு ! பாட்டி !

துரை-குரல்:—நானும் பிழைத்திருக்கிறேன்--மண்டையில் பெருத்த அடி !

காமா :—உனக்கெங்கே அடி ?

குஞ்சு:—நான் தான் விலகிக் கொண்டேனே. அம்மா எங்கே? சாகவில்லையே !

தியா : —விளக்குக் கொண்டு வாருங்கள்—அப்பா, மாயாண்டி !

காமா :—உருமபிள்ளை !

ராஜீ :—இதோ—என் விளக்கும் ! இருவிளக்கொளிகளும் !

சுப-குரல்:—நல்லவேளை, நான் இறங்கும் தறுவாய். நிறுத்து வண்டியை நிறுத்து என முட்டிக்கொண்டேன், நிறுத்தாமல் முட்டிக் கொண்டான்—எனக்கு வந்த பயமோ—அம்மாடி !—என் கண்மேல் வீசாதே ஒளியை ! வீசாதே என்மேலும் ! (தோன்றுகிறாள்)

தியா :—(சுபத்திரையைக் கண்டு) இதென்ன மணக்கோலமா ? கடிதத்திற்குத் தக்க பதில்! உடனேயே !

சுப :—(நகையொடு) எங்கே குஞ்சு ?

குஞ்சு :—வந்தேன், வந்தேன் (சுபத்திரையைக் கட்டிக் கொள்கிறாள்.)

காமா :—உருமபிள்ளை ! குரலையே காணுமே ! உருமபிள்ளை—ஐயையோ—இறந்தனை (அழுகிறாள்)

தியா :—அழவேண்டாம், பார்க்கிறேன் போய் ! பாட்டரிக்கருகே அமர்பவனாதலால் மின்சாரம்தாக்கிக் கொன்றிருக்கலாம்...(இடப்புறம் மறைய)

காமா:—சாமியாராகிலும் பிழைத்தாரா, இன்னொரு விளக்கொடு வருகிறேன் (உள் மறைகிறாள்).

துரை-குரல் :—பிழைத்திருக்கிறேன் — இதோ—கீழ்படுத்தக்கொண்டு !

[மாயாண்டி விளக்குடன் வருகிறான்]

மாயா :—வேடிக்கை, அங்கு வந்து காணுங்கள். ஐயையோ—எப்படி உடைந்தது வண்டி—நொடிக்குள் என்னுச்சு மாயம் ? (மறைகிறான்)

சுப :—இங்குச் சாவும் சாய்வும்! வேடிக்கைக்கு அழைக்கிறாயா அழுமூஞ்சிகளே !

குஞ் :—அம்மா! (சுபத்திரை இடுப்பில் ஏறிக்கொண்டு) இந் நாட்களாய் ஏன் காணோம் உன்னை ?

சுப :— நான் திருமேலிருஞ்சோலை சென்றிருந்தேன் !

குஞ்சு :—ஏன் என்னையும் உடன் அழைத்தேகவில்லை ?

சுப :—நீ சமத்தாயில்லாமல் அசடா யிருந்ததால் - அல்ல—நீ சமத்தே—இனி உன்னை...இனி நீ...

ராஜீ :—என்றும் எக்காலும் அம்மா அம்மா, என்று அலறிக்கொண்டு அசடுபோல் நீ...

சுப :—அது அசடல்ல—சமத்தே—தாயை மறப்பதோ சமர்த்து ?

ராஜீ :—வா—நான் மோட்டாருடைந்த வேடிக்கை பார்க்கப்போகிறேன்—வா, குஞ்சு! (இடப்புறம் மறைய).

குஞ்சு:—நான் சமத்துதானேம்மா ?

சுப:—ஆம் !

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—12. திருவடி சூட்டு படலம்.

[939-வது பக்கத் தொடர்ச்சி]

வள்ளுவர்க் குறுபோருள் வரகவி யுணர்த்தினர்.

கங்கையைக் கடந்து கரைசேர்தலும், தாயர் மூவரும் சிவிகையிற்செல உடன்வரும் குகனுடன் பரதன் காவதம் பல நடந்து வரத்தின்மிக்குயர் பரத்துவாச முனிவரின் உறைவிடம் மேவினன். யாண்டும் போல் ஈண்டும் வான்மீகிமுனிவர் கதைமுறையில், "பெண்சொற் பணிந்து மன்னன் இராமனைக் காட்டிற் கோட்டினன்......இராமருடைய இராச்சியத்தைப் பகையில்லாமல் அநுபவிக்க விரும்பினவராய், கொடுமையற்றவரான அவருக்கும் அவர் தம்பிக்கும் கொடுமை செய்ய விரும்பாதிருக்கின்றீரா" என்று பரதனை நோக்கிப் பரத்துவாச முனிவன் வெளிப்படையாய் உடைத்துக்கேட்டுச் சோதித்தசொற்களைக் கம்பர்உள்ளடக்கி,

> எடுத்த மாமுடி சூடிநின் பாலியைந்
> தடுத்த போர சாண்டிலை யையநீ
> முடித்த வார்சடை யோடு முனிவர்தா
> சுடுத்து நண்ணுதற் குற்றுளதி யாதென்றான்.

["ஐயனே, உன்னிடத்து வந்து பொருந்திய பெரிய அரச செல்வத்தை நீ உயர்ந்த பெரிய கிரீடத்தைச் சூடிக் கொண்டு ஆளாயல், முடித்த நீண்ட சடையுடனே, முனிவர் தரிக்கும் மரவுரியை உடுத்து இங்கு வருதற்குரிய காரணம் என்ன" என்று பரத்துவாசன் கேட்டான்]

என நாடக நவிற்சிக் கிணங்க மாற்றிக்கொண்டனர். இதற்குப் பரதன் பகர்ந்த மறுமொழியும் அன்னதே. பரத்துவாசன் கொடிய அச்சொற்களால் கேட்பதும், அதற்குப் பரதன்,

"மூன்று காலங்களையும் அறிந்த தாங்களும் இப்படி என்னை எண்ணுவீர்களேயானால் நான் அழிந்தேன். நான் என்னிடத்தில் குற்றங் காண்கின்றிலேன்; ஆகையால் தாங்கள் கேட்கக்கூடாத வார்த்தையைச் சொல்லாம லிருக்கவேண்டும். நான் இல்லாத காலத்தில் என் தாய் சொல்லியது எதுவோ, அது எனக்கு விருப்பமானதன்று. நான், அத் தொழிலால் மகிழவுமில்லை அச் சொல்லை அங்கீகரிக்கவுமில்லை. நான், அவருடைய தாளில் அபிவாதஞ்செய்யும் அந்த மனிதப் புலியினிடத்து நல்ல வார்த்தை சொல்லவும், அவரை அயோத்திக்குத் திருப்பியழைத்துப் போகவும் வந்தேன். தாங்கள், என்னைப்பற்றி இவ்வாறறிந்து, என்னிடத்து அருள் புரியவேண்டும். பகவானே இராமர் எங்கிருக்கிறார்."

எனப் பணிவுடன் பதிலுரைப்பதும் வான்மீகத்தில் நிகழ்ந்திருக்க அதற்கெதிரே, கொடுஞ்சினத்தொடு மனங்கடுத்துப் பரதன்,

> எனக்க டுத்தது செய்தில னென்றசொல்
> உனக்க டுப்பதன் றுலுர வோயெனு

கடிந்துரைக்குமாறு பெரிது மாற்றினர் கம்பர்பிரான். தன்னைத் தகவின்றி நிந்தித்தா னிம்முனிவன் எனப் பரதன் சினந்தான்போல் மேல்நோக்கிற்குத் தோன்றுமெனினும், உள்ளுற அலசி நோக்குங்கால், "அடுத்த பேர்அரசு" என்றுமுனிவனுக்கடுக்காத சொல்லையவன் சொல்லி இழிவதோ என்னும் ஒருசெவ்விய சீற்றமே சிறக்கும் பரிசு புலப்படும். இலக்குவனைப்போல் பரதனும், பிறர் குறையைத் தான்பொறுக்காப் பெருமையோனாகின்றான். ஆகி, முறையின் நீங்கித் தான் முதுநிலங்கொள்ள நில்லாமையைக்கூறி,இராமன் மீண்டிடமறுப்பானாயின் தானும் யாண்டெலாங் கானத் தொருங்குடன் உறைந்திட வந்த உறுதியை இவ்வுத்தமன் உரைத்தலும் மாதவத்தோர்க்கெலாம் அரைத்த சாந்து கொண் டப்பியதென்னப் பூரித்த மேனியும் மனமுங் குளிர்ந்தன. வாராவிருந்தினர் தன்பால் வந்துளர்எனும் ஊக்கமொடு பரத்துவாச முனிவர் பரதன் பரிவாரத்தினர்க்குப்போனகம் இனிதிபற்றஉளங்கொண்டு தன்னருந் தவத்தின் உதவியால் தீயின் ஆவுதி செங்கையிற் சொரிந்து நினைத்தவளவில் துறக்கமே பறந்துவந்தங்குப் படிந்ததென்னப் பல்வகைப் போகங்கள் பெருகுதலும், சனங்கள் முன்னைத் தம் வாழ்வெல்லாம் மறந்து பிறந்த வேறோர் உலகு பெற்றாரென, வந்து வந்து எதிரேத்திய அரம்பையர்தம்மொடும் வைகி,

> அஞ்ச டுத்த வமளி யலத்தகப்
> பஞ்ச டுத்த பரிபுரப் பல்லவ
> நஞ்ச டுத்த நயனியர் நவ்வியிற்
> றுஞ்ச வத்தனை மைந்தருந் துஞ்சினர்

[அன்னத்தூவி இலவம்பஞ்சு செம்பஞ்சு மயில்தூவி வெண்பஞ்சு என்னும் இவ்வைந்துவித பொருள்களாலாகிய மெத்தையில், செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற சிலம்பணிந்த தளிரனையபாதங்களையும், விஷம்போன்ற கண்களையுமுடைய தேவகன்னியர் மான்போல் அருகில் படுத்திருக்க, பரதனுடன் போந்திருந்த ஆடவரனைவரும் தூங்கினர்]

அப்பொழுது,

> நந்த நந்த வனங்களி னுண்மலர்க்
> கந்த முந்திய கற்பகக் காவினின்
> றந்தர் வந்தென வந்திதன் கைதர
> மந்த மந்த மணந்தது வாடையே

[அங்குப் பூந்தோட்டங்களாக அமைந்த புதிய பூக்களின் வாசனை மிகும்படி செழித்துள்ள கற்பகச்சோலையிலிருந்து, அந்திக்காலம் கைகொடுத்து அழைத்துவர, குருடர் தள்ளாடித்தழாவி வருவதுபோல் வாடைக்காற்று மணம்வீசிக் கொண்டு மெல்லமெல்ல நடந்தது]

மந்தமாருதத்தை எத்தனையோ பல நயங்களுடன் கவிஞர் பிறர் உவமித்திருக்கின்றனர். எனினும் அந்திகைதர வந்த அந்தரென அது மெல்லமெல்ல மணக்கக் கம்பர் வாய்க்கே காத்திருந்தது. பரத்துவாசன் பரிவுடன் அமைத்த போகங்களெல்லாம் கனவென அவ்வோரிரவினிறுதியில் கலைந்துபோயின. அன்று மெல்ல மெல்ல மணந்த வாடையின் மணமும் மறுநாளில்லை. எனினும் அத்தென்றல்தான் வந்துலவி மலர்ந்த இச்சிறு பாசுரமோ, யுகங்கள்தோறும் அதனை ஓதியோதி உகப்பார் உள்ளங்கள்தோறும் கலையாத அருங்கலையின் தெய்வத் தமிழ்மணங் கமழ்கின்றதே.

இன்னத னகவயின் பரதன்மாத்திரம் குன்றாத விரதமுடையனாய்க் காயுங்கிழங்கு முண்டு தரையிற் படுத்துப் பொழுதைக்கழிக்கக் கதிரவன் உதயமாயினன். பகவானாகிய இராமபிரானது அடியாரை உபசரிக்கவேண்டுமெனுங் கடமையைப் பூண்டோ, மற்று

பரதனது மனநிலையைச் சோதித்துத் திடஞ்செய்வதற்கோ பரத்துவாசன் படைத்த அப்போகசெல்வங்கள்மறைந்தகல அனைவரும் அம்முனிவரன்பால்விடைகொண்டு புறப்பட்டு ஓர் பாலைவனஞ் சென்றடைந்தனர். இளையகோவொடும் இன்னுயிர்ச் சீதையோடும் முன் இராமன் கடந்த கடுஞ்சுரமே இது. அன்று தன் வல்லியல் திரிந்து தண்ணென்றுய பரிசினைச் "சீலமன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ" எனத் தொடர்நிலைச் செய்யுட்குறிபணி யமைத்து முடித்தனர் தன் மெய்க்கலை உணர்வினுல் உலகினை உய்விக்கவந்த கம்பர். இன்று, படையின் செலவினுல் எழுந்த துகளில் அழுந்திய வெய்யவன் வெம்மையாற, சொரிந்தபெருங் கரிமதச்சேற்றினுல் தரையுங் குளிர்ந்தது. மிடைந்து சென்ற குடைகளின் நிழலுமன்றி,

> பெருகிய செல்வநீ பிடியென் றுள்வயிற்
> றிருகிய சீற்றத்தாற் செம்மை யாய்நிறங்
> கருகிய வண்ணலைக் கண்டு காதலி
> னுருகிய தளிர்த்தன வுலவை யீட்டமே

[மிகுந்த அரச செல்வத்தை நீ ஏந்திக்கொள் என்று கூறிய கைகேசியின்பால் முறுக்கிய கோபத்தால் முகஞ் சிவந்து மெய்கறுத்த பரதனைக்கண்டு அன்பினுல் நெகிழ்ந்தவைகளாகி, முன் பட்டுப்போன மரங்களும் இப்பொழுது அப் பாலைவனத்தில் துளிர்த்துச் செழித்தன]

வறுமையால் மற்றோர் வலிய தீமையால் வறண்டு உலர்ந்த உலகந்தான் பொலிவுறத் தளிர்க்க ஒருவரும் ஒன்றும் எடுத்தளிக்க வேண்டியதில்லை. செவ்விய பரதனைப்போல் தீமையைக் காய்ந்துநின்ற தூய்மையோர் இயங்குத லொன்றே போதும். இதற்கடுத்து,

> வன்றெறு பாலையை மருத மாமெனச்
> சென்றது சித்திர கூடஞ் சேர்ந்ததா
> லொன்றுரைத் துயிரினு மொழுக்க நன்றெனப்
> பொன்றிய புரவலன் பொருவில் சேனையே.

[உயிரைக்காட்டிலும் ஒழுக்கமே சிறந்ததென்று கருதி, கைகேசிக்கு உரைத்த ஒரு சொல்லின் வாய்மையைக் காப்பாற்றும்பொருட்டுத் தான் மாய்ந்த தயரதனது ஒப்பற்ற சேனையானது, கொடிய வருத்தம்செய்கின்ற பாலைநிலத்தை மருதநிலம்போல் வருத்தமின்றிக்கடந்து சித்திரகூடத்தைச் சேர்ந்தது]

எனவரும் செவ்வியசெய்யுளில் நம்கவிவரர் மீண்டுமோருண்மையை உணர்த்துகின்றார். வள்ளுவர் வாசகத்தைக் கம்பர் எடுத்தாளுமிடங்களில் இதுவுமொன்று. நாயனார் மொழிகளோடு கருத்தையுந் தழுவித் தம் நூலில் அமைத்துக்கொள்பவர் கம்பர் என்று உலவிவரும் அபவாதம் ஆதாரமற்றதென்பதை விளக்குதற்கிங்கிதன்முன் பல செவ்விகள் வாய்த்துள. வள்ளுவர் உள்ளத்தை விளக்குதற்கேனும், அல்லது அவர் உரையாது விட்டதைச் சேர்த்துவைப்பதற்கேனும், அல்லது, திருக்குற ளுரையாசிரியர்களைத் திருத்துதற்கேனும், அல்லது, வள்ளுவர் கொள்கையினின்று தான் மாறுபடுவதைத் தெரிவிப்பதற்கேனும், இவையனைய நோக்கமுடன் திருக்குறள் வந்து கம்பர் நூலினுள் திகழுமேயன்றிக் கம்பருக்கும் அந்நூலின் சொற்கள் சில தெரியும் என்னும் அரிய இரகசியத்தை நிறுவுதற் குதவுமா றன்றென்பதை முயன்றறிந்தால் நன்மை பெரிதுளது. இச்செய்யுளினுள்,

> ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
> உயிரினு மோம்பப் படும்.

என்னும் குறட்பாவின் எதிரொலி எளிதிற் கேட்கும். வாய்மை வழாதொழுகுமாறு தன் மன்னுயிர் துறந்த வேந்தன்சேனைக்குப் பாலைநிலமும் மருதவேலியாய் மாறியதென்னும் பெற்றியில், ஒழுக்கம் இன்னதென்பதும், விழுப்பம் இன்னதென்பதும், பின் அவ்வதிகாரத்தில்,

> நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
> மென்று மிடும்பை தரும்

எனவரும் குறளிற் குறித்த நன்றி யின்னதென்பதும் புதிய விதிகளால் விளக்கமுறும் நீர்மையைச் சிந்திக்கச் சிந்திக்கப் பொருட்பொலிவு வழிவழி சிறப்பதாகும்.

அறத்தினை, முதலறம் சார்பறம் என இருவகை செய்து, வடநூல் ஆசிரியர்களொடு திருவள்ளுவரும் அரசியல்திறத்தில் சார்பறத்தைச் சாதித்திருக்கக் கம்பர் முதலறத்தை முன்வைத்துப் பேசிய பெருமையை முன் ஓர் முறை (3 வது வால்யூம், இதழ்கள் ஒன்றுமுதல் இருபத்தைந்து வரையில்) விரிவாக இவ்விதழ்களில் வரைய நேர்ந்துளது. அங்குரைத்த வைகளிற் சில இங்கு இவ் வொழுக்கத்தின் திறத்தினும் ஒக்கும். ஒழுக்கமுடைமையாவது, "தத்தம் வருணத்திற்கும் நிலைக்கு மோதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல்" என்று பரிமேலழகரும், "தத்தங் குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஏற்ற ஒழுக்கமுடையராதல்" என்று மணக்குடவரும் ஒன்றி விளக்குமிதனை ஒவ்வாதவர்போல் கம்பர், எவ்வருணத்திற்கும் எந்நிலைக்கும், எக்குலத்திற்கும் எவ்வறத்திற்கும் இயன்ற வாய்மையை ஒழுக்கமாகக் கம்பர் உரைக்கலாயினர். இத்தகைய ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்று பொன்றினுன் மன்னவன். எற்றுக்கு? அவ்வொழுக்கத்தினின்று தான் யாதும் விழுப்பம் பெறுவதற்கன்று. தான் தானேயா யிருப்பதன்றித் தனக்கு வேறோர் விழுப்பம் வேண்டா. மீண்டும், "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்றவிடத்து, "அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கம்" எனக் கூறப்படும் உரையும் ஒருவாறு ஒவ்வப்படாததாயிற்று. இம்மைமறுமை இன்பங்களை நினைத்து ஒழுக்கமுடையராதல் இடையாயர்க் கேற்ற திறன். மேலுலகம் இல்லெனினும் நல்லொழுக்கமுடைமையே நன்று. ஒன்றுரைத்து ஒழுக்கம் உயிரினும் நன்றென வாய்மையில் தலைநின்ற தயரதன் இருமையின் இன்பங்களை எதிர்நோக்கினவ னல்லன். ஒழுக்கம் நன்றென அவன் அன்று பொன்றியதன் பயன் யாதோவெனின், இன்று அவன் சேனை தான் பாலையை மருதமாய் வருத்தமின்றிக் கடந்த பான்மையே. ஒழுக்கமுடைய சான்றோனுபவன் இருந்தாலும் இறந்தாலும் அதனுல் விளையும் விழுப்பமும் நன்மையும் பிறருக்கு இடுக்கண் வந்து சாராமையிற் காணல் வேண்டும். இவ்வாறு திருக்குறள் பொருள்படக் கம்பர் அதனைத் தன் பாசுரத்தில் நிறுத்திக்கொண்டார். "உன்னுடைய ஒழுக்கம் பிறருக்கு விழுப்பமும் நன்மையும் தருதலால், நீ உன் உயிரைக் கொடுத்தேனும் அவ்வொழுக்கத்தினை ஓம்பிக்கொளல் வேண்டும்" என்னும் மேன்மையை விளக்கவல்லதாய் வள்ளுவர் குறள் கம்பர் விருத்தத்தில் மாறிவிட்டது. இனி அவரவர்க்குரிய ஒழுக்கம் இன்னதென்று சாத்திரங்களைத் தேடுவதின்றியே ஈகை வாய்மை யனையமுதலறங்களே ஒக்கநின் றுய்விக்கவல்ல ஒழுக்கங்களாகுமென்னும் நீர்மையையும் இச்செய்யுள் நினைக்கச்செய்கின்றது.

ஆண்டாள்

5. ஆண்டாள் முத்தி பெற்றதும் அதன் புராணவரலாறும்.

[897-வது பக்கத் தொடர்ச்சி]

(i) புராணக் கூற்று

புராணத்தில் கூறியுள்ளபடி நாம் ஆண்டாள் வரலாற்றை ஏற்போமாயின், ஒரு பக்கத்தில் அகச்சான்றுகளுக்கு முற்றிலும் மாறுகக் காணப்படுவதுடன், அது இவ்வம்மையார் ஒளியையும் மிகவும் குறைக்கின்றதென்னலாம். ஆண்டாள் திருவரங்கப் பெரியகோயிலுள் பள்ளிகொண்ட திருவரங்கர் படுக்கையை மிதித்தேறி அந்தர்ப்பவித்தருளினு ரென்னும் விஷயம் உண்மை யென்பதற்குப் பல அத்தாட்சிகள் அவ்விடத்திலும் வேறுபல இடங்களிலும் உள. ஆயினும் பேதும்பைப் பருவத்திலேயே முத்திபெற்றார் என்பது அவர் பாடல்களினின்றாகித்துணர நிற்கும் அகச்சான்றுகளுக்குப் பொருந்தாமையா யிருக்கின்றது.

> அவரைப் பிராயம் தொடங்கி யென்றும்
> ஆதரித் தெழுந்தவென் தடமுலைகள்
> துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
> தொழுது வைத்தேன் "
> (1-வது திருமொழி 4.)

என்று கூறுவதால் மடந்தைப்பருவம் கடக்கும் வரையில் ஆண்டாள் உயிருடனிருந்தார் என்பது திண்ணம். இவர் கல்விகேள்விகளிற் சிறந்தவராய்த் தன் தந்தையாருக்குச் சமமாய்ப் பிறருக்குப் போதனைசெய்யும் சத்தியில் சிறந்து விளங்கினுரென அவர் பதிகங்களினின்றும் அநுமானிக்கலாம். இவரிடத்தில் "கற்றன பேசி வசையுண்டவர்" பலரென்னலாம். தன்னுடைய வார்த்தைகள் நடைவாழ்வில் கட்டுண்ட மாந்தருக்கு மருந்துபோல் விழுங்கக் கஷ்டமாய் அக்காலத்திலிருந்ததென்பது இவர் அறிந்தார். அதனுல் தான் கூறும் வார்த்தைகள் மருந்தாயிருந்த போதிலும் பிறவிநோய் தீர்க்கு மென்று பின்வருமாறு பாடினுர்.

> பருந்தாட் களிற்றுக் கருள்செய்த
> பரமன் தன்னைப் பாரின்மேல்
> விருந்தா வனத்தே கண்டமை
> விட்டு சித்தன் கோதைசோல்
> மருந்தா மென்று தன்மனத்தே
> வைத்துக் கொண்டு வாழ்வார்கள்
> பெருந்தா ளுடைய பிரானடிக்கீழ்ப்
> பிரியா தென்று மிருப்பாரே.
> 14-வது திருமொழி 10.

ஆண்டாள் சிறுவயதிலேயே திருவரங்கத்தில்மறையவில்லை யென்பதற்கும், பலகாலம் வில்லிப்புத்தூரிலும் அவ்வூரைச் சுற்றியிருக்கின்ற மல்லிநாட்டிலும் பெருமானுடைய திருநாமம் பரவும்படி செய்து கண்ணன் தத்துவத்தை வெளியிடுவாராயினுர். இவர் "மல்லிநாடு ஆண்டமயில்" என்று திருக்கண்ண மங்கையாண்டா னருளிச்செய்த கீழ்வரும் செய்யுளை ஆராய்க:—

> அல்லிநாள் தாமரைமே லாரணங்கி னின்துணைவி
> மல்லிநா டாண்ட மடமயில் - மெல்லியலாள்
> ஆயர் குலவேந்த னாகத்தாள் தென்புதுவை
> வேயர் பயந்த விளக்கு.

"நாடாண்ட" என்பது உண்மையிலும் அரசாட்சி செய்திருக்கலாம்--அல்லது உருவகத்திலுமிருக்கலாம். அவர்காலத்தில் தென்னிந்தியாவானது சிற்றரசர்களால் பற்பல இடங்களில் ஆளப்பட்டதென்பதும், அச்சிற்றரசர்கள் சில இடங்களில் பூசுரராயுமிருந்தனரெனவும்நம்முடைய தேசசரித்திரங்களினின்று அநுமானிக்கலாம்— பிராமணர்களுக்கென்று விடப்பட்டது சுரோத்திரீகம் என்னும் ஒருவகை ஆட்சியென்றும் ஜமீன்தார்களைப்போல் சுரோத்திரீகதாரர்களும் அக்காலத்தில் சிற்றரசு செய்தனரென்பதும் திண்ணம்— உய்யக்கொண்டார் அருளிச்செய்த,

> அன்ன வயல்புதுவை யாண்டா ளரங்கற்குப்
> பன்னு திருப்பாவை பல்பதிகம்—இன்னிசையால்
> பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
> சூடிக் கொடுத்தாளைச் சொல்"

என்னும் செய்யுளில் "புதுவையாண்டாள்" என்னும் தொடர்மொழிபுதுவையை அரசாட்சிசெய்தவள் என்னும் பொருளும் தருமாதலால், இவ்வம்மையாருக்கு ஆண்டாள் என்பது அரசியாயிருந்தவள் என்னும் பொருளைக் குறிக்கும் என்பதும் விபரீதமன்று.

இதன்றியும் இவ்வம்மையார் தன்னுடைய திருநாமம் கோதையென்றே ஆங்காங்குக் கூறுகின்றாரன்றித் தன்னை ஆண்டாள் என்று எங்கும் மொழியவில்லை. அதனுல்ஆண்டாளென்பது இவருக்குக் காரணப்பெயரன்றி இடுகுறிப்பெயர் அன்றென்று துணிந்து கூறலாகும். இதனுலும் அவர் செய்யுட்களாற் காட்டப்பட்ட உலகஅநுபவத்தின் முதிர்ச்சியாலும் இவ்வம்மையார் முத்திபெற்றது இளம்பிராய மன்றென்று கொள்வதே யேற்புடைத்தாகும்.

இவ்வம்மையார் உயிருடன் உலாவிய காலத்திலே ஜீவன்முக்தராய் விளங்கினுரென்பது அவர் திருவாக்கைக் கொண்டே நிரூபிக்கலாகும். 12-ம் திருமொழியில் 3-வது செய்யுளில் "மாயவன் வந்து உருக்காட்டுகின்றுன்,"—அதாவது மாயவன் தரிசனம் எனக்கு நேர்வதால் என் ஜீவன் உருகாநிற்கின்றது—என்றும் "கஞ்சைக் காய்ந்த கருவில்லி கடைக்கணென்னும் சிறுகோலால், நெஞ்சூடுருவ வேவுண்டு நிலையுந்தளர்ந்து நைவேனை" என்றும் "கண்ணனென்னும் கருந்தெய்வம் காட்சிப்பழகிக் கிடப்பேனை" என்றும் கூறுவதால், இவ்வம்மையார் சொரூபசமாதியில் எப்பொழுதும் நிலைத்து அநுபவிக்கும் சிறப்பு விளங்கும்.

இவ்வாறு சொரூபசமாதியில் இன்புற்றஇப் பெண்யோகியர் தான் சிறு போதில் பரமாத்துமாவின் திவ்ய மங்கள குணங்களைப் பிரத்தியக்ஷத்தில் கண்டு அநுபவிக்காமல் ஏதேதோ கூறியது கால்நடைகளின் பின்செல்கையை ஒத்ததென்றும், அவ்வாறு மந்தைகளில் ஒன்று மற்றொன்றின்பின் அவ்வழியே செல்வது போல் பிரத்தியக்ஷ அனுபவமின்றி நல்வழிச்செல்வோமாயினும் அதன் புண்ணியம் தொடர்ந்து பலந்தருமென்றும் காட்டுவ...

188946

"கறவைகள் பின்சென்று கானஞ் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத் துன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்றன்னொடு
உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினு லுன்றன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறியரு ளாதே
இறைவா நீதாராய் பறையேலோ ரெம்பாவாய்

திருப்பாவை - 28.

என்றனர் போலும்.

இனி முத்தியாவது யாது? அது மனதிற்கும் வாக்கிற்கும் அதீதமான வீட்டின் நிலையாயினும், அதைப் பெறுவோர், வெளியில் நம்மவர்களுக்கு எங்ஙனம் காணப்படுவார் என்பதைச் சற்று ஆராய்ந்த பின்னர், ஆண்டாள் பெற்ற முத்தியையும் அதன் புராணக் கூற்றையும் சிறிது ஆராய்ந்து இக்கட்டுரையை முடிப்போம்.

(ii) முத்தியின்வகை.

முத்தி இருவகைத் தென்பர் மேலோர். அது ஜீவன் முத்தி யென்றும் விதேகமுத்தி யென்றும் கூறப்படுவன ஆகும். ஜீவன் முக்தியாவது தேகமுள்ளபோதே பரம்பொருளுடன் இரண்டறக்கலந்து நிற்றலாம். இதைச் சமாதிநிலை யென்றும் கூறுவர். அணுவுக்கணுவாய் அந்தாங்கத்தில் பரம்பொருளைத் தரிசிப்பது சொரூபசமாதி யென்றும், மற்று, வெளியில் மகத்துக்கு மகத்தாய்ப் பரம்பொருளைத் தரிசித்தல் சகசசமாதி யென்றும், இவ்விருவகைச் சமாதியில்ஆழ்ந்து கண்டவிடமெல்லாம் கடவுள்மயமாகக் காணும் பெரியோரை ஜீவன் முக்தரென்றும் மேலோர் மொழிவர். இம் முக்தி எம்மதத்திற்கும் சம்மதமானதாகும். இதன்றியும் இது பிரத்தியக்ஷ அநுபவத்தாலேயும் நிரூபிக்கக் கூடியது.

மற்றொருவகை முத்தி விதேகமுத்தி யெனப்படும். ஜீவன்முத்தரும் தம் தேகத்தைக் கீழேயெறிந்து பரம் பொருளுடன் இரண்டறக்கலப்பது விதேக முத்தி யென்பதாகும். தேகமானது பஞ்சபூதங்களா லாக்கப் பட்டதாதலால்,பூதங்களுக்கு அதீதமானபொருள் அத்தகையதோர் மேலான பொருளைக் கூடும்போது பஞ்சபூதத்தால் நேர்ந்த ஸ்தூலயாக்கையை விட்டெறிந்து திவ்ய சோதிவடிவாய்ச் சென்று பரம்பொருளிற் கலக்குமென்பார். இது யுக்திக்குப் பொருத்தமாயினும், ஜீவன்முக்தர்களாய் விளங்கிய நமது சமயகுரவர்களும் நாயன்மார்களும் தேகமாகிய சேஷத்தைப் பூமியில் விட்டுச் சென்றதாகக் காணப்படவில்லை. இதைச் சற்று நோக்குவோம் :—

திருநாவுக்கரசு நாயனர் திருப்புகலூரில் முத்தியடைந்த விதமானது, சிவபெருமான் ஒரு அரிமா வடிவமாக வந்து விழுங்கியதாகவும் "சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்" என்று அவர் அக்காலத்தில் பாடியதாகவும் ஒருபுராணக் கூற்றுண்டு. சேக்கிழார் இவ்வாறு கூறுவிடினும், அப்பர் தேகத்தை விட்டுச்சென்றதாய்க் கூறவில்லை—அத்தேகம் எவ்விடத்திலாகிலும் அடக்கம் செய்ததாகவும் கூறப்படவில்லை. திருஞானசம்பந்தரும் தனது தேகத்துடனும் தன்னுடைய பரிவார சுற்றத்தாருடனும் சோதியிற் புகுந்ததாகவே காணப்படுகின்றது— இதன்றியும் மணிவாசகப் பெருமானும் தேகத்தை நீக்கி முத்தியடைந்ததாகக் கூறப்படவில்லை. சைவருடைய தேகம் சிவலிங்க வுருவமென்று எண்ணப்படுவதைத் தற்காலத்தில் வீரசைவர்கள் ஒழுக்கத்தா லனுமானிக்கலாகும். ஆதலால் சைவர்கள் விதேக முத்தியைக் கொண்டாடியதாகக் காணப்படவில்லை. கிறிஸ்து மதத்திலும் சிலுவையில் அறையப்பட்டுப் பிறகு புதைக்கப்பட்ட உடலுடன் இயேசுநாதர் விண்ணுலகடைந்தாரென்று கொள்கின்றனர்.

—~*=*~—

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[926-வது பக்கத்தொடர்ச்சி]

6. தூதுவிடு சருக்கம்.

441

ஆட்டி னார்வெறி கமழ்வன வணிகிளர் நறுநீர்
தீட்டி னார்நறுஞ் சந்தமுஞ் சிறிதுமெய் கமழச்
சூட்டி னார்சிலர் நறுமலர் அறுசுவை யடிசில்
ஊட்டி னாரவ னமரரு ளொருவனைத் தொளிர்ந்தான்.

(சிலர்) வெறிகமழ்வன அணிகிளர் நறுநீர் ஆட்டினார் - நன்மணங்கமழும் அழகுவாய்ந்த நல்ல நீரால் அவனை நீராட்டுவித்தார்; (சிலர்) சிறிது மெய்கமழ நறுஞ் சந்தமும் தீட்டினார்-அவனுடைய மெய் மணக்கும்படி நல்ல சந்தனமும் கொஞ்சம் பூசினார்; சிலர் நறுமலர் சூட்டினார் -சிலர் வாசனைபொருந்திய பூக்களைச் சூட்டினார்; (சிலர்) அறுசுவை அடிசில் ஊட்டினார். அறுசுவையோடுகூடிய உணவை ஊட்டுவித்தார். அவனும் - அவனும், அமரருள் ஒருவன் ஒத்து ஒளிர்ந்தான் -தேவர்களில் ஒருவனை ஒத்து விளங்கினன்.

442

வயந்த முன்னிய திலகைகல் லியாணிகை வடிவார்
வியந்த சேனைமென் கமலமா லதையென விளம்பும்
இயங்கு பூங்கொடி யனையவ ரியல்புக ணினையா
வயங்கு தொல்புகழ் அம்பர சரன்மகிழ்ந் திருந்தான்.

வயந்தம் முன்னிய திலகை - வசந்ததிலகை, (வயந்தம் முன்னிய) கல்லியாணி - வசந்தகலியாணி, வியந்தை வடிவு ஆர்-வியக்கத்தக்க அலங்காரமும் அழகும் நிறைந்த, (வயந்தம் முன்னிய) சேனை - வசந்தசேனை, மென்கமலம் மாலதை - கமலவதை, என விளம்பும் - என்னும் பேர்களை உடைய, இயங்கு பூ கொடி அனையவர் - நடந்து செல்லும் பூங்கொடியைப்போன்ற (அந்த நான்கு) மங்கையரின், இயல்புகள் நினையா - எழில் நலங்களைப் பார்த்துச் சிந்தித்து, வயங்குதொல் புகழ் அம்பரசரன் மகிழ்ந்து இருந்தான் - பரந்த பழைய புகழையுடையவனான அவ் வித்தியாதரன் மகிழ்வுற்றிருந்தான்.

'வய்ந்த முன்னிய' என்பது 'திலகை', 'கல்லியாணி' 'சேனை' என்ற மூன்றினோடுங் கூட்டி உடரைக்கப்பட்டது. 'கமலதை' என்னும் பேர் முன்மொழிக்கேற்ற அடையும், இடையில் 'மா' என்னும் விசேடணமும் ஏற்றுவந்தது. இயங்கு பூங்கொடி - இல்பொருளுவமை. அம்பரசரன் - ஆகாயத்தில் சஞ்சரிப்பவன். (அம்பரம் - ஆகாயம்). 'கேசரன்' என்பதும் இப் பொருட்டே.

(வேறு)

443

ஆங்கெழிற் பொலிந்தவ னிருந்தபின் னலங்குதார்
வீங்கெழிற் பொலிந்ததானை வேந்தனேவ வீவில்சீர்ப்
பூங்கழற் பொலங்குழைத் திவிட்டனோடு போர்க்கதம்
தாங்கெழிற்பெருங்கையானை சங்கவண்ண னேறினன்

அவன் ஆங்கு எழில் பொலிந்து இருந்தபின் - அங்கே மருசி (அவ்வாறு) அழகாற் பொலிந்து தங்கியிருக்க, அலங்கு தார் வீங்கு எழில் பொலிந்த தானை வேந்தன் ஏவ - அசைந்தாடும் மாலையின்மிக்க அழகால் விளங்கும் சதுரங்க சேனையோடு கூடிய மன்னவனாகிய பயாபதியினால் ஏவப்பட்டு, சங்கவண்ணன் வீவு இல் சீர் பூ கழல் பொன்குழை திவிட்டனோடு - கெடாத வெற்றியோடு கூடிய அழகிய வீரக்கழல்களையும் பொன்குழைகளையும் அணிந்த திவிட்டனோடு சங்குபோன்ற வெண்ணிறத்து விசயன், போர் கதம் தாங்கு எழில் பெரும் கை யானை ஏறினன் - போர் செய்யும் உக்கிரம்பொருந்தியதும் அழகிய பெரிய கையை உடையதுமான யானையின்மேல் ஏறினன்.

திவிட்டனது உயர்வு தோன்ற அப்பெயர்க்கு ஒரு 'ஒடு'கொடுத்து முடித்தார்.

444

தம்பியோடு சங்கவண்ணன்
அம்பொன்மாலை தாழ்முகப்
பைம்பொனோடை வீழ்மணிப்
பகட்டெருத்த மேறினன்
செம்பொன்மா மலைச்சிகைக்
கருங்கொண்மூவி னோடெழூஉம்
வம்பவெண் ணிலாவிலங்கு
திங்கள்போல மன்னினன். 44.

தம்பி ஒடு சங்கவண்ணன் - திவிட்டனோடு விசயன், அம் பொன் மாலை தாழ் - அழகிய பொன்மாலைகள் தொங்கவிடப்பட்டதும், பசும் வென்முகம் ஓடை - பசும் பொன்னலாகிய நெற்றிப்பட்டத்தை உடையதும், வீழ்மணி - இருமருங்கும் தொங்கவிட்ட மணிகளை உடையதுமான, பகட்டு எருத்தம் ஏறினன்- யானையின் மேற்கழுத்தில் ஏறி,செம்பொன் மலைசிகை- மேருமலையின் உச்சியில், கரும் கொண்மூஇன் ஒடு எழூம் - கரிய மேகத்தோடு எழுகின்ற, வம்ப வெண் நிலா இலங்கும் திங்கள்போல - புதிய வெண்ணிலாவுடன் விளங்கும் சந்திரனைப்போல, மன்னினன் - பொருந்தி இருந்தான்.

445

ஆர்த்தபல் லியக்குழாம் அதிர்த்தகுஞ் சரக்குழாம்
தேர்த்தவீரர் தேர்க்குழாம் திசைத்தபல் சனக்குழாம்
போர்த்தசா மரக்குழாம் புதைத்தவெண் கொடிக் [குழாம்;
வேர்த்தவேந்தர்பலகுழாம் விரைந்தகூந்தல்மாக்குழாம்

(அப்பொழுது) பல் இயம் குழாம் ஆர்த்த-பலவாத்தியத் தொகுதியும் இசைத்தன; குஞ்சரம் குழாம் - யானைக் கூட்டமும், தேர்ந்த வீரர் தேர் குழாம்-தேர்ந்தெடுக்கப்பட்ட போர்வீரர்களின் தேர்க்கூட்டமும், அதிர்த்த-அதிரும்படி ஒலித்தன; பல் சனம் குழாம் திசைத்த - பல சனக்கூட்டம் திகைத்தன; சாமரம் குழாம் - சாமரத் தொகுதிகள், போர்த்த - விண்ணை மறைத்தன; வெண் கொடி குழாம் - வெண்மையான கொடிகளின் கூட்டங்கள்,புதைத்த - விண்ணை மூடின; வேந்தர் பல் குழாம் - பல அரசர்களின் கூட்டம், வேர்த்த - சனநெருக்கத்தால் புழுங்கி வேர்த்தார்கள். கூந்தல் மா குழாம் விரைந்த - நெற்றிமயிரை உடைய குதிரைகள் விரைந்து சென்றன.

தேர்த்த - செய்யுள் விகாரம். திசைத்தல் - திகைத்தல். கூந்தல் - தலைமயிர்; இங்கு உளை.

446

பாடுவார் வணங்குவார் பலாண்டுகூறி வாழ்த்துவார்
ஆடுவாரோ டார்வமாந்தார் அன்னரின்ன ராயபின்
சூடுமாலை சோரவுந் தொடாரமாலை வீழவும்
மாடவாயின் மேலெலா மடந்தைமார் மயங்கினர். 46

அன்னர் இன்னர் ஆயபின் - அவ்விருவரும் இவ்வாறு யானைமேலேறிப் புறப்பட்டவுடன், மாடம் வாயில் மேல் எல்லாம் - மாடங்களின் வாயில்களிலும் மேற்பக்கங்களிலும் எங்கும், மடந்தைமார் - பெண்கள், ஆர்வம் மாந்தர்ஒடு - தமது அன்பராகிய கணவரோடு கூட, பாடுவார் வணங்குவார் பல்லாண்டு கூறி வாழ்த்துவார் ஆடுவார் - பாடுவாராயும் வணங்குவாராயும் பல்லாண்டு கூறி வாழ்த்துவாராயும் ஆடுவாராயும், சூடு மாலை சோரவும் - தலையிற் சூடிய மாலைகள் அவிழ்ந்து விழவும், தொடு ஆரம் மாலை வீழவும் - கட்டிய ஆரங்களும் பூமாலையும் கழன்று விழவும், மயங்கினர் - கவனியாது மயங்கிக் களித்தார்கள்.

'ஒடு' பிரித்து 'மாந்தரோடு' என்ற கூட்டப்பட்டது. ஆரமாலை - உம்மைத்தொகை; முத்து மாலையுமாம்.

447

கொண்டலார்த்த பொன்னெனிக்
குழற்கொடிக் குழாமனார்
மண்டலங் நிறைந்ததிங்கள்
வட்டமொத்த வாண்முகம்
குண்டலங் கொழும்பொனோலை
யென்றிரண்டு கொண்டணீஇ
வண்டலந்து மாலைதாழ்ந்து
மாடவாய் மறைந்தவே. 47.

இ குழல் கொடி குழாம் அன்னார் - இந்தக் கூந்தலோடு கூடிய பூங்கொடியை ஒத்தவர்களாகிய பெண்களின், மண்டலம் நிறைந்த திங்கள் வட்டம் வாள் முகம் - கலைநிரம்பிய பூரண சந்திரனைப்போன்ற ஒளி பொருந்திய முகத்தில், கொண்டல் ஆர்த்த பொன் என் குண்டலம் கொழும் பொன் ஓலை என்று இரண்டு கொண்டு - மேகத்தோடு பொருந்திய சூரியன் என்று சொல்லத்தக்க செம்பொற்குண்டலம் ஓலை யென்ற இருவகைக் காதணிகளைக்கொண்டு, அணீஇ - அழகுற்று, வண்டு அலந்து மாலை தாழ்ந்து - வண்டுகள் வருந்தும் பூமாலைகள் தாழ, மாடம் வாய் மறைந்தவே - மாடங்களின் வாயில் களெல்லாம் அம்முகங்களால் மறைந்தன.

பொன் - சூரியன், அலந்து - நொந்து, வருந்தி. கொண்டலார்த்த பொன் கூந்தலைச் சார்ந்த குழை

யோலைகளுக்கு உவமை. குழற்கொடி - இல்பொருளு வமை. வாள் - ஒளி.

448.

கூடுதும்பி யூடுதோய் குழற்றொகைத் துணர்துதைந்
தோடுமேலெருத்திடைக் குலைந்தகோதை யோடுலாய்
மாடவாயில் மாலைஞால மாடமேறு மாதரார்
ஆடுமஞ்ஞை கோடுகொள்வதென்னலாவதாயினர் 48

ஓடுமேல் - தாம் விரைந்து ஓடும்போது, கூடு தும்பி ஊடு தோய் - ஆணும் பெண்ணுமாய்க் கூடிய வண்டுகள் உள்ளே படிந்த, குழல் தொகை - கூந்தலின் தொகையாகிய, துணர் துதைந்து - பூங்கொத்துக்கள் செறிந்து, எருத்து இடை குலைந்த கோதையோடு - பின்கழுத்திலே அவிழ்ந்து சரிந்த கூந்தலோடு, மாலை ஞால - பூமாலைகள் அசைந்து தொங்க, உலாய்-உலாவி, மாடம் வாயில் மாடம் ஏறு மாதரார் - வீடுகளின் வாயிலின் மேலுள்ள உப்பரிகைகளின் மேலேறும் மங்கைமார், ஆடுமஞ்ஞை கோடு கொள்வது என்னல் ஆவது ஆயினர் - (மேகத்தைக் கண்டு களித்து) ஆடும் மயில்கள் மலையின் உச்சியில் ஏறுகின்றன என்று சொல்லத்தக்கவர் ஆயினர்.

மாடம்-வீடு, மாடம் மேற்றளம். கோடு-மலைச்சிகரம்.

449

தொண்டைவாய் மடந்தைமார்கள்
சுடிகைவட்ட வாண்முகம்
கொண்டகோவி னீரவாய
கோடிமாட மேலெலாம்
வண்டுசூழ்ந்த பங்கய
மலர்க்குழாம் இணைப்படேஉக்
கெண்டையோடு நின்றலர்ந்த
கேழவாய்க் கிளர்ந்தவே. 49.

தொண்டைவாய் மடந்தைமார்கள் சுடிகை வட்டம் வாள் முகம் கொண்ட - கொவ்வைக்கனி போன்ற வாயையுடைய பெண்களின் நெற்றிச்சுட்டி அணிந்த ஒளி பொருந்திய மயிர்ச்சுருள்கள் சூழ்ந்த முகங்களைத் தம்மிடத்தே கொண்ட, கோவில் நீர ஆய கோடி மாடம் மேல்எல்லாம், அரண்மனையைப் போன்றனவாகிய பல்லாயிரம் மேல்மாடங்கள் எல்லாம், வண்டு சூழ்ந்து பங்கய மலர் குழாம் இணை படேஉ கெண்டையோடு நின்று அலர்ந்த கேழவாய்-வண்டுகள் சூழ்ந்த தாமரை மலர்க் கூட்டம் இரண்டிரண்டு கெண்டை மீன்களோடு எழுந்து நின்று மலர்ந்த தன்மையவாய், கிளர்ந்த - விளங்கின.

சுடிகை - நெற்றிச்சுட்டி. கேழ் - தன்மை. இணைப் படேஉ - இணைப்பட்ட, இரட்டையாகிய.

1930-வது வருட வால்யூம் — பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும்.

1930-வது ஆண்டு இதழ்கள் கற்போருக்கு மிகவும் பயனளிக்கவல்லது. இந்நாள் மாந்தர் அல்லலே வாழ்க்கையென மயங்கிக் காற்றில் அடிபட்ட துரும்பெனப் பறக்கின்ற பரிபவம் ஈதென்றும், கற்பதின் பயன் அலையடங்கி வாழ்தல் என்றும் விளக்குவது 1930-ஆண்டின் தலையங்கக் கொள்கையாகும். அறியாமை வேண்டப்படும், விஷயத்திற்கேற்ற விளம்பரம், இருபக்கம் எதற்குமுளது, முயலுக்கு முயலவேண்டா, ஒக்க நினைப்பார் உறவு, நல்லோர்கடன், விளம்பினல் வெட்கக்கேடு, எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கவேண்டாவோ, தர்க்கத்தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள், வண்டிமாடு, மாட்டுவண்டியும், உரிமையாற் பெரியாகார், மானமழிந்தபின் கலைகளே மானங்காக்கும், பள்ளியிற் பழுத்தபழம், சுண்டெலி ஆற்றல், வாலின் நீளம், பெருமையின் பெருமை ஆய பல தலைப்பின்கீழ் விஷயவாய்மை விளக்கப்பட்டுளது.

அவ்வாண்டில் கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் ஆரம்பமாயது. முதல் 25 இதழ்களில், மதுரை அறிஞரான ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியாரது 'கைகேசியின் நிறையும், தசரதன் குறையும்' என்னும் நூல் ஆயப்பட்டுளது. இது கற்றோர்க்கு நல்விருந்தாகும். அறமே நினைத்தும் ஆற்றவார் இன்னல், கவியைக் கடந்த கருத்து முளதோ, அமரர்க்கோர் கருவியே கேகயி ஆயினள், அறத்தினைக் காக்கவோ வரத்தினை வேண்டினள், கூனியை ஏற்றிய கோபுரமிதுவோ, மன்னவன் புகழைக் கொன்றோ மாதரான் பழியைக்காத்தல், என்னும் தலைப்புக்கள் பலவற்றின்கீழ் பாரதியார் நூல் ஆயப்பட்டுளது. கம்பர் வகுக்கும் அமைச்சின் பெருமை ஈதென்று, வள்ளுவர்துணை கொண்டும் வியாதர் உரைகொண்டும் விளக்கப்பட்டுளது. கம்பராமாயணத்தை ஆழ்ந்து படிப்பவர்க்குக் கலாநிலயத்தில் வரையலாகின்ற கட்டுரைகள் பயன் பெரிதளிக்கும்.

இவ்வாண்டில் இலக்கணம் கற்க விரும்புவார்க்கென்று புணரியல் முழுதும் எளிபதாகும் வழியில் 50 இதழ்களில் வந்துளது. முயன்று படிப்போர் எளிதில் இலக்கணத்தைக் கற்றுவிடலாம். இலக்கண வல்லுநர்க்கும் எழும் பல சந்தேகங்கள் இங்குத் தெளியவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடன் பதிப்பிக்கப் பெற்றுளது. குறுந்தொகை இப்பொழுது புத்தகரூபமாக இல்லையாதலால் இவ்வாண்டு இதழ்கள் அக்குறையைப் பூர்த்திசெய்கின்றது.

இலஞ்சிப்பாவை என்ற நாவலும், ஆச்சரிய சூடாமணி என்னும் நாடகமும் மானத சாத்திரமும், மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் வந்துள்ளன.

விலை விபரம் :—	உள்நாடு	வெளிநாடு
பைண்டு செய்யாதது	7—8—0	9—0—0
காலிகோ கில்ட்	8—8—0	10—0—0
அரை தோல் கில்ட்	9—0—0	10—8—0

புத்தகம் வேண்டுவோர் முன்பணம் அனுப்பி, தங்கள் ஊர் ரயில்வேஸ்டேஷனையும் தெரிவித்தால் Topay போட்டு ரயில்வே பார்சலாக அனுப்புவோம். ரயில்வே கட்டணமும் புத்தகம் ஒன்றிற்கு அணுக்கு மேல் ஆகாது. ரயில் இல்லாத ஊருக்கு போஸ்டில் அனுப்பத் தபால் செலவு ரூ 2 ஆகும். வேண்டுவோர் புத்தக விலையோடு தபால் செலவுக்கென ரூ 2 சேர்த்து அனுப்பவேண்டும். பர்மா சிலோன் முதலிய விடங்களுக்கு ரயிலில் அனுப்ப இயலாது. பினங் சிங்கப்பூர் மலேயா முதலிய வெளிநாட்டிலிருப்பவர் தபால் செலவிற்காகப் புத்தகம் ஒன்றிற்கு ரூ 3 சேர்த்து அனுப்பவேண்டும்.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

வர்த்தமானம்

1931 வது வருடம் ஜனவரிமாதம்முதல் அக்டோபர் மாதம்வரை அமெரிக்காவில் 1700 பாங்கிகள் நஷ்டமடைந்து மூடப்பட்டனவாம். அதனால் ஜனங்களுக்கு 150 கோடி டாலர் நஷ்டமாம்.

***

இங்கிலாந்தில் R. 101 என்ற ஒரு ஆகாயக்கப்பல் கட்டப்பட்டது. அதைச் செய்து முடிக்க 4½ லட்சம் பவுனும் அதன் பாதுகாப்புக்காக 5½லட்சமும் ஆக 10 லட்சம் செலவாயுள்ளது. இந்தக் கப்பலை விற்றுவிடப் பிரிட்டிஷார் முயல்கின்றனர். சரியான விலை கொடுக்க எவரும் முன்வரவில்லை என்றுதெரிகின்றது.

***

காதரைன் என்னும் மாது ஒருத்தி அயர்லாந்தில் இருக்கின்றாளாம். அம்மாதிற்கு இப்பொழுது வயது 111. சென்றவாரம் அவ்வம்மையார் தமது 111-வது வருடப் பிறந்தநாளைக் கொண்டாடினாராம். 5 அரசர்கள் ஆண்டதை அவர் பார்த்திருக்கின்றாராம்.

***

பாலித்தீவில் ஜனங்கள் சிறப்பாய் விவசாயத்தையே தங்கள் தொழிலாகக் கொண்டவர் என்றும், பெண்களே அங்கு உழுது பயிரிடுகின்றனர் என்றும், ஆண்கள் விளைநிலத்திற்கே செல்லக்கூடாதென்றும் தெரியவருகின்றது.

***

பர்மாக் கலகத்தலைவனை சாயாசென் என்பவனை விசாரித்துத் தூக்குத் தெண்டனை விதித்திருந்தனர். அவனைச் சென்றவாரம் தாரவாடியில் தூக்கிவிட்டனர் என்று பர்மாச் செய்தி கூறுகின்றது.

***

ஐரோப்பிய மாதர்கள் தம்முகத்திலே இரத்தஓட்டமும் பளபளப்பும் அதிகமாவதற்கென்று தினம் கால் மேலும் கை கீழுமாய் நின்றுவருகின்றார்களாம். இப்படிச் செய்தால் முகவசீகாம் ஏற்படுமாம். சுருக்கம் முகத்தில் ஏற்படாதாம். முகப் பவுடர்களும் தேவையில்லையாம்.

***

சென்ற வாரத்தில் கும்பகோணத்தில் திவான்பகதூர் டி. ஆர். இராமச்சந்திர ஐயர் தலைமையில் பிராமணர் மஹாநாடு கூடியது. இம் மஹாநாட்டில் பிராமண தர்மம் பரவுவதற்குப் பிராமணர் செய்யவேண்டியவை இவை என்று செய்யப்பட்ட முடிவு வருமாறு:—ஆங்கிலப் படிப்பும் பணவாசையுந்தான் பிராமண தர்மம் குன்றியதற்குக் காரணமாகும். பணவாசையும், உத்தியோக ஆசையும் விருந்துகளில் பிராமணனை மாமிசம் தின்னவைத்தன. பிராமணர் தர்மம் வளரவேண்டுமெனில் பிராமணன் ஆங்கிலப் படிப்பை விட்டுவிடவேண்டும். கோயில் சண்டை பிராமணர்களுக்கு வேண்டா. ஆதித்திராவிடர் கோயிலுக்குள் வந்தால் அவர்களை நாம் ஏன் தடுக்கவேண்டும். பிராமணன் அவனது கர்மாக்களைச் சரியே செய்வானேயானல், அவனுக்குக் கோயில் வேண்டா. கிறிஸ்தியப் பாதிரிமார்கள்போல் பிராமண விற்பன்னர்கள் பிரசாரம் துவக்கவேண்டும் அப்பொழுதுதான் பிராமண தர்மம் மீண்டும் சிறக்கும். பிராமணப் பெண்களைப் பள்ளிக்கூடங்களுக்கு இனி அனுப்பக்கூடாது.

***

சாந்தி நிகேதனம் :—ரவிந்தரநாத டாகூர் நடத்தும் சாந்தி நிகேனக் கலாசாலையைப்பற்றி ஸ்ரீமதி ஹதீப் சிங் என்பார் கொழும்பில் ஒரு கூட்டத்தில் கூறியதாவது:-இன்றைக்கு 13 வருடங்களுக்குமுன் சாந்தி நிகேதன கலாசாலை கவி ரவிந்தரநாத டாகூரால் நிறுவப்பெற்றது. கலாசாலை ஆரம்பமான பொழுது டாகூர் அவர்களே போதித்துவந்தார். வரவரக் கலாசாலை வளர்ச்சியுற்றது. மாணவர்கள் தொகையும் வளர்ந்தது. பிறகு டாகூர் அறிஞர் சிலரைத் தமக்குத் துணையாகக் கொண்டார்.

இச் சாந்திநிகேதனம் கல்கத்தாவிலிருந்து 100 மைல் தூரத்திலுள்ள போல்பூர் என்னும் கிராமத்தில் அமைந்துளது. அங்குப் பெருங்கட்டடங்கள் கிடையா; சிறு சிறு குடிசைகளே அமைக்கப் பெற்றுள்ளன. மரநிழலில்தான் பாடம் போதிக்கப்படும். இச் சாந்திநிகேதனத்தில் மெட்ரிகுலேஷன்வரை போதிக்கப்படுகின்றது. சங்கீதப் பயிற்சி தரப்படுகின்றது. சங்கீத பாடத்தை டாக்டர் டாகூர் நேரிலே கவனித்து வருகின்றார். இங்குக் கலைப்பயிற்சியோடு கைத்தொழில் பயிற்சியும் விவசாயப் பயிற்சியும் தரப்படுகின்றது. நெசவுத்தொழில் எல்லோருக்கும் கற்பிக்கப் படுகின்றது. கலைகளில் சித்திரம் எழுதும் கலைமிகவும் முக்கியமாகக் கற்பிக்கப் படுகின்றது. வசந்தகாலம், கோடைகாலம், இலையுதிர்காலம், குளிர்காலம், ஆகிய ருது ஆரம்பங்கள் அங்கு விழா நாட்களாகும். சாந்திநிகேதனத்தில் கற்றபிறகு, விச்வபாரதி என்னும் சர்வ கலாசாலையில் மாணவர்கள் பயிற்சி பெறலாம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



புனேட்டட் ஸோல் ஏஜண்டு: கன்வஸர்ன், மதுரை.

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

நஞ்சன்கூடு பல்பொடி

பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்

188946

சென்னை 600 008

KALANILAYAM.
REG. NO., M'2324.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு		விலை வெளிநாடு
,, 9-0-0	அரைலெதர் பயிண்டு	,, 10-8-0
,, 8-8-0	காலிகோ	,, 10-0-0
,, 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும். தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலாநிலயம்,
புரசை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

ஏற்படுத்தியது] நாஷனல் [1906

இன்ஷ்யூரன்ஸ் கம்பேனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷ்யூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு
இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் பட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பேனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பேனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பேனி, மானேஜர்கள்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)